ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




திங்கள் ❖ அக்டோபர். 14, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 10 ❖ இதழ் 13 ❖ ரூ.10

## சென்னை, திருவள்ளூர் உள்ளிட்ட 4 மாவட்டங்களுக்கு அக்.16-ம் தேதி

# ரெட் அலர்ட்

## தமிழகத்தில் அக்டோபர்17 ஆம் தேதி வரை கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது; சென்னை வானிலை ஆய்வு மையம்

**சென்னை : அக். 14**

**தமிழகத்தில் அக்டோபர்17 ஆம் தேதி வரை கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. மேலும், அக்.,16 ஆம் தேதி சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய 4 மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.**





இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "தமிழக உள் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தென்கிழக்கு வங்கக்கடலில் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன்காரணமாக, 14 - ஆம் தேதி வாக்கில், தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதியில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்து, வட தமிழகம், புதுவை மற்றும் தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகளை நோக்கி, அதற்கடுத்த 48 மணி நேரத்தில் நகரக்கூடும்.

தென்மேற்கு பருவமழை இந்திய பகுதிகளிலிருந்து அடுத்த நான்கு தினங்களில் விலகும் நிலையில், கிழக்கு மற்றும் வடகிழக்கு காற்று தென்னிந்திய பகுதிகளில் வீசும் நிலையில், 15 - 16 ஆம் தேதி வாக்கில், வடகிழக்கு பருவமழை தென்னிந்திய பகுதிகளில் துவங்கக்கூடும்.

இன்று (அக்., 14) தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். விழுப்புரம், கடலூர், அரியலூர், பெரம்பலூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யவாய்ப்புள்ளது.

நாளை (அக்.,15) ஆம் தேதி வட தமிழகத்தில் அநேக இடங்களிலும், தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யவாய்ப்புள்ளது.

(அக்.,16) ஆம் வட தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழை முதல் அதி கனமழையும், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்கள், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், கள்ளக்குறிச்சி மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யவாய்ப்புள்ளது.

(அக்.,17)தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடியலேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, தருமபுரி, சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யவாய்ப்புள்ளது. (அக்.,18) மற்றும் (அக்.,19) தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு: அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது / மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 33-34° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27-28° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான / கன மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 32-33° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 26-27° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: தமிழக கடலோரப் பகுதிகளில் இன்று (அக்.13) முதல் அக்.,15 ஆம் தேதி வரை தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

வங்கக்கடல் பகுதிகள்: இன்று (அக்.13) தெற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

இன்று (அக்.14) தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகள், தெற்கு வங்கக்கடல் மற்றும் மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். எனவே மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## புதுக்கோட்டையில் மழைநீர் தேங்கி நின்ற இடங்களை மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

புதுக்கோட்டை : அக். 14,







புதுக்கோட்டை மாநகராட்சிக்குட்பட்ட சாந்தாரம்மன் கோவில், பல்லவன் குளம் மற்றும் பூ மார்க்கெட் உள்ளிட்ட பகுதிகளில், வடகிழக்கு பருவமழையின் காரணமாக, மழைநீர் தேங்கி நின்ற இடங்களை, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா நேற்று மழைநீரில் நடந்தே சென்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள். அந்த வகையில் மழைநீர் தேங்கியுள்ள இடங்களில் பொதுமக்களுக்கு எவ்வித சிரமமின்றி உடனடியாக மழைநீர் அகற்றப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், சென்னை வானிலை மையம், புதுக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கு 3, 4 நாட்களுக்கு மழை பெய்யும் என்று அறிவித்திருந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு ஒருமணி நேரத்திற்கு மேலாக புதுக்கோட்டை மாநகராட்சிக்குட்பட்ட வடக்கு ராஜவீதி, திலகர்திடல், அடப்பன்வயல், சாந்தாரம்மன் கோவில், பூ மார்க்கெட் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பெய்த கனமழையால் சாலைகளில் மழைநீர் தேங்கி நின்றது. இந்த இடங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.


மேலும், புதுக்கோட்டை பல்லவன் குளம் மழைநீரால் நிரம்பி வழிந்தோடி சென்று, பூ மார்க்கெட் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மழை நீர் தேங்கியிருந்த நிலையில், புதுக்கோட்டை மாநகராட்சியின் சார்பில் பல்லவன் குளத்தில் உள்ள மழை நீரை ராட்சத வாகனம் மூலம் வெளியேற்றும் பணி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பல்லவன் குளம் நிரம்பி அதில் உள்ள தண்ணீர் செல்லும் வரத்து வாய்க்கால் மற்றும் மன்னர் காலங்களில் முறையாக பராமரிக்கப்பட்டிருந்த வரத்து வாய்க்கால்களில், தற்பொழுது ஆக்கிரமிப்புகள் மற்றும் அடைப்புகள் இருந்தால் அவற்றை உடனடியாக அகற்றி, மழைநீர் சீராக செல்லும் வகையில் பணிகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் பூ மார்க்கெட் பகுதியில் தேங்கியிருந்த மழைநீரில் நடந்து சென்று அனைத்து இடங்களையும் பார்வையிட்டு, ஆக்கிரமிப்புகளை அகற்றி, அடைப்புகளை சரிசெய்து மழைநீர் செல்வதற்கான வழியினை உடனடியாக ஏற்படுத்திடவும், இப்பணிகள் மழைக்காலங்களில் மட்டுமின்றி நிரந்தர தீர்வாக அமைவதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும்பேரிடர்காலங்களில், மாவட்ட ஆட்சியரகத்தில் 24 மணிநேரமும் செயல்பட்டுவரும் கட்டுப்பாட்டு அறையின் 04322 222207 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்களை பொதுமக்கள் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தெரிவித்தார். இந்நிகழ்வுகளின் போது மேயர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையர் த.நாராயணன், வட்டாட்சியர் பரணி, மாமன்ற உறுப்பினர் (16-வது வார்டு) சேட், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## கலைஞர் பூங்காவில் ஜிப்லைன் பழுது – ரோப் காரில் அந்தரத்தில் தொங்கி அலறிய பெண்கள் : உரிய பாதுகாப்பு வழங்க இபிஎஸ் வலியுறுத்தல்

*சென்னை : அக். 14*





கலைஞர் நூற்றாண்டு பூங்காவில் ஏற்பட்ட ஜிப்லைன் பழுது காரணமாக, ரோப் காரில் பயணித்து கொண்டிருந்த 2 பெண்கள் அந்தரத்தில் தொங்கியவாறு அலறி கூச்சலிட்டனர்.

சென்னை கதீட்ரல் சாலையில் 6.9 ஏக்கர் நிலப்பரப்பில் உலக தரத்துடன் நவீன அம்சங்களுடன் கலைஞர் நூற்றாண்டு பூங்கா ரூ.46 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டது. இதில் மக்களை கவரும் வகையில் உயர்தர தோட்டக்கலை அருங்காட்சியகம், இசை நீரூற்று, 500 மீட்டர் நீளமுடைய ஜிப்லைன் ரோப் கார், கலைக்கூடம், கண்ணாடி மாளிகை போன்ற வசதிகள் இடம்பெற்றுள்ளன. இதனை முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 7-ம் தேதி திறந்து வைத்தார்.

இந்நிலையில் ஆயுதபூஜை, விஜயதசமி விடுமுறையொட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏராளமான மக்கள் பூங்காவுக்கு வருகை தந்திருந்தனர். அப்போது அங்குள்ள பிரபல ஜிப்லைன் ரோப் காரில் பொதுமக்கள் உற்சாகத்துடன் பயணித்து கொண்டிருந்தனர். அப்போது ஜிப்லைனில் திடீரென தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு ரோப் கார் பழுதடைந்து பாதி வழியில் நின்றது. இதனால் அதில் பயணித்து கொண்டிருந்த பெண்கள் இருவரும் அதிர்ச்சியடைந்து அலறி கூச்சலிட்டனர்.

தொடர்ந்து அந்தரத்தில் 20 நிமிடங்களுக்கு மேலாக தொங்கியவர்கள் அழவும் தொடங்கினர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது. அங்கு கூடியிருந்த சுற்றுலா பயணிகள் ஒன்றாக கோஷமிட்டு பெண்களை உடனடியாக மீட்குமாறு வலியுறுத்தினர். இதற்கிடையே நீண்ட நேரமாக ஜிப்லைன் இயங்க வைக்க முயன்றுகொண்டிருந்த ஊழியர்கள், அது முடியாததால் பின்னர் கயிறு மூலமாக ரோப் காரை கட்டி இழுத்தனர்.

இதையடுத்து அந்தரத்தில் தொங்கிய பெண்களை பத்திரமாக மீட்டு கீழே கொண்டுவந்தனர். விடுமுறையை மகிழ்ச்சியுடன் கொண்டாட வந்த பெண்கள், உயிர் பயத்தில் அலறிதுடித்தது அங்கிருந்தவர்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது. தொடர்ந்து ரோப் காரில் எதனால் தொழில் நுட்ப கோளாறு ஏற்பட்டது என்பது குறித்தும் விசாரணை நடைபெற்று வருகிறது.

இச்சம்பவம் குறித்து கண்டனம் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி, "அரசு பூங்கா புதிதாக திறக்கப்பட்டுள்ளது என்பதை நம்பி வரும் மக்களின் உயிரோடு பாதுகாப்பற்ற உபகரணங்களைகொண்டு திமுகஅரசுவிளையாடுவது கண்டனத்துக்குரியது. மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி பெயரிலான இந்த பூங்காவுக்கு நுழையவே ரூ.100 கட்ட வேண்டும். இதுதவிர ஒவ்வொரு வசதிக்கும்தனிகட்டணம்.

இவ்வாறு தனியார் பொழுதுபோக்கு பூங்காக்களுக்கு இணையாக கட்டணம் வசூலிக்கும் திமுக, பூங்காவுக்கு வருகை தரும் மக்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குவதையும் உறுதி செய்ய வேண்டும்" என்று இபிஎஸ் வலியுறுத்தியுள்ளார்.

## பாபா சித்திக் கொலையின் பின்னணியில் கூலிப்படை தொடர்பு குறித்து விசாரிக்க 5 தனிப்படை அமைப்பு

*மும்பை : அக். 14*



"பாபா சித்திக் கொலையின் பின்னணியில் கூலிப்படை தொடர்பு இருக்கிறதா என்பது குறித்த விசாரணை முடுக்கிவிடப் பட்டுள்ளது. இது குறித்து விசாரிக்க 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டு அந்தக் குழுக்கள் வெவ்வேறு மாநிலங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது"என்றுமாநில துணை முதல்வர் அஜித் பவார்தெரிவித்துள்ளார்.

முன்னதாக, மகாராஷ்டிரா மாநிலம் மும்பை - பாந்த்ரா கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அஜித் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்தபாபா சித்திக் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். நிர்மல் நகரில் உள்ள அவரது மகனின் அலுவலகத்துக்கு வெளியில் இருந்த போது துப்பாக்கிச்சூடு நிகழ்ந்துள்ளது. இரண்டு முதல் மூன்று ரவுண்டுகள் வரை சுடப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தை மூன்று பேர் நிகழ்த்தியுள்ளனர். அதில் இருவரை போலீஸார் பிடித்துள்ளனர். ஒருவர் மாயமாகி உள்ளார். அவர்களிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

66 வயதான பாபா சித்திக் கடந்த 1976 முதல் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக இருந்தார். மூன்று முறை எம்எல்ஏ-வாக தேர்வு செய்யப்பட்டவர். அமைச்சராகவும் பணியாற்றி உள்ளார். கடந்த பிப்ரவரியில் தேசியவாத காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். இந்நிலையில் அவரது படுகொலை சம்பவம் விரைவில்சட்டப்பேரவை தேர்தலை சந்திக்கவுள்ள மகாராஷ்டிரா அரசியல் களத்தில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இது குறித்து துணை முதல்வர் அஜித் பவார் நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோது, "மும்பையில் நடந்த சம்பவத்தை என்னால் நம்ப இயலவில்லை. பாபா சித்திக் எங்கள் தலைவர்களில் முக்கியமானவர். மும்பையில் இருந்து பல ஆண்டுகளாக பணியாற்றியுள்ளார். அவர் இதற்கு முன்னர் காங்கிரஸ் கட்சியிலும் இருந்துள்ளார். மூன்று முறை எம்எல்ஏ-வாக இருந்தவர். அமைச்சராகவும் இருந்துள்ளார். காவல்துறை அவரது படுகொலை சம்பவம் பற்றி உடனடியாக விசாரணையை தொடங்கிவிட்டது. இதுவரை 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளது. அவை வெவ்வேறு மாநிலங்களுக்கும் சென்றுள்ளன. முதல்வர், உள்துறை அமைச்சர் மற்றும் நான் நிலைமையை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். கூலிப்படையை ஏவியது யார்? பின்னணியில் இருப்பதுஎன்ன?போன்ற விவரங்கள் 2-3நாள்களில் அம்பலமாகும்.

இன்று இரவு 8.30 மணியளவில் முழு அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்கு நடைபெறும். பாபா சித்திக் கொலையை வைத்து எதிர்க்கட்சிகள் அரசியல் செய்யலாம். ஆனால் அரசின் இலக்கு என்னவோ சட்டம் - ஒழுங்கை பாதுகாப்பது மட்டுமே" என்றார்.

பாஜகவின் முக்கியத் தலைவர்களில் ஒருவரான முக்தார் அப்பாஸ் நாக்வி இச்சம்பவம் குறித்து, "மாநில அரசு குற்றவாளிகளை நெருங்கிவிட்டது. இதைவைத்து யாரும் அரசியல் செய்யத் தேவையில்லை. அவ்வாறு செய்பவர்கள் முக்கியப் பிரச்சினைகளை அரசியலாக்குதல் என்ற முதிரிச்சியற்ற அணுகுமுறையைக் கொண்டவர்களாவர்" என விமர்சித்துள்ளார்.

## அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் மாணவர் குறைதீர் குழுக்கள் : யுஜிசி அறிவுறுத்தல்

*சென்னை : அக். 14*




மாணவர்கள் தங்கள் புகார்களை தெரிவிக்க ஏதுவாக அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் குறைதீர் குழுக்களை அமைக்க வேண்டுமென யுஜிசி அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து பல்கலைக்கழக மானியக் குழுவின் (யுஜிசி) செயலர் மணிஷ் ஆர். ஜோஷி, அனைத்து விதமான உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கை விவரம்: நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் தங்களது கல்வி நிறுவனம் தொடர்பாக குறைகள், புகார்கள் ஆகியவற்றை தெரிவிப்பதற்கு ஏதுவாக மாணவர் குறைதீர் குழுக்களை ஏற்படுத்த வேண்டும் என்று டெல்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்த தகவல் கல்வி நிறுவனங்களுக்கு கடந்த மாதம் தெரியப்படுத்தப்பட்டது. எனவே, உரிய வழிகாட்டுதல்களை பின்பற்றி இந்த குழுக்களை முறையாக அமைப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்து கல்வி நிறுவனங்களும் மேற்கொள்ள வேண்டும். கல்லூரிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாணவர் குழுக்களின் விவரங்களை தங்களது பல்கலைக்கழகத்துக்கு தெரிவிக்க வேண்டும். இதையடுத்து அனைத்து பல்கலைக்கழகங்களும் அந்த விவரங்களை ஒருங்கிணைத்து யுஜிசிக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

# இன்று

**14-10-2024**

சக வருடம் 1946 ஆஷ்வினம் 22

திருமாலபூர் மணிகண்டீஸ்வரர் கோயில் – கோர்ட் வழக்கு வெற்றி தரும் திருத்தலம்.

குரோதி புரட்டாசி 28 — OCT - MON திங்கள் — ரபிஉல்ஆகிர் 10 — வளர்பிறை 288 / 078

வளர். துவாதசி 46.27 (கா. 12.37) சதயம் 40.59 (மா. 10.26) தியாஜ் 01.13, 55.50 சித்த 40.59 மேல் மரண. திருப்பதி ஸ்ரீஏழுமலையப்பன் சத்தாவல் சமஸ்தான மண்டபம் எழுந்தருளல். திருத்தணி ஸ்ரீமுருகப் பெருமான் பால் அபிஷேகம். கியர்வின் முகையதீன் ஆண்டவர் உருஸ்.

| நல்லநேரம் | கௌ.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 9.15-10.15 | 1.45-2.45 | 07.30 | 01.30 | 10.30 |
| மாலை: 4.45-5.45 | 7.30-8.30 | 09.00 | 03.00 | 12.00 |

சூலம்: கிழக்கு; பரிகாரம்: தயிர் — கன்னியா லக்னம் இருப்பு நா. 0 வி. 39 — சந்திராஷ்டமம்: புனர்பூசம், பூசம்

கரணம்: 9-10.30 — சூரிய உதயம்: 6.02

பெருமையும் சிறுமையும் வாயால் வரும்

இராசிபலன்

| | |
|---|---|
| மேஷம் | ஆர்வம் |
| ரிஷபம் | உதவி |
| மிதுனம் | அலைச்சல் |
| கடகம் | ஆக்கம் |
| சிம்மம் | குழப்பம் |
| கன்னி | ஜெயம் |
| துலாம் | பாசம் |
| விருச்சி | புகழ் |
| தனுசு | நம்பிக்கை |
| மகரம் | பரிவு |
| கும்பம் | வெற்றி |
| மீனம் | சினம் |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

நிலையென்று
ஒன்றுமில்லை இவ்வுலகில்.
ஒவ்வொரு சோகமும்,
துன்பமும் வாழ்க்கையில்
நல்ல பாடத்தை கற்று தரவே
வருகின்றது..!!




# கடையநல்லூரில் தென்காசி மெடிக்கல் சென்டர் மற்றும் அனி அம் ஸ்கேன் சென்டர் திறப்பு விழா மற்றும் இலவச மருத்துவ முகாம்



கடையநல்லூர் : அக். 14

தென்காசி மாவட்டம், கடையநல்லூரில் தென்காசி மெடிக்கல் சென்டர் மற்றும் அனி அம் ஸ்கேன் சென்டர் சார்பில் கடையநல்லூர் ரஹ்மானியாபுரத்தில் புதிய கிளை திறப்பு விழா நடைபெற்றது.

கடையநல்லூர் காவல் ஆய்வாளர் ஆடிவேல் மருத்துவமனையை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து திறப்பு விழாவைமுன்னிட்டுநடைபெற்ற மாபெரும் இலவச மருத்துவ முகாமை காவல் ஆய்வாளர் ஆடிவேல் துவக்கி வைத்து தானும் மருத்துவ பரிசோதனை செய்து கொண்டார். இலவச மருத்துவ முகாமில் 20க்கும் மேற்பட்ட நோய்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டது. முகாமில் 400க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இந்நிகழ்ச்சியில் தென்காசி மெடிக்கல் சென்டர் நிறுவனர் டாக்டர் சிவச்சந்திரன், டாக்டர் நாகஜோதி, தென்காசி மெடிக்கல் சென்டர் நிர்வாக இயக்குனர் பாரதிராஜா, விழிப்புணர்வு பேச்சாளர் மஹ்மூதா, மருத்துவர்கள் நளினா, மேனகா, முகைதீன் ஷாருக், ஸ்ரீமதி, வேல்முருகன் மற்றும் தென்காசி மெடிக்கல் சென்டர் பணியாளர்கள் மற்றும் பெஜான்சிங் மருத்துவமனை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## மாணவர்களை ஆக்கபூர்வமாக வளர்த்தெடுக்க ஆசிரியர்களுக்கு முன்னாள் அமைச்சர் வலியுறுத்தல்

மதுரை : அக். 14

கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களை ஆக்கப்பூர்வமாக வளர்த்தெடுக்க வேண்டும் என, காமராஜர் பல்கலை.கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம் வலியுறுத்தினார்.



மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரியில் திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கமதுரை மண்டல அறிமுகக் கூட்டம் நடந்தது. மாநில ஒருங்கிணைப்பாளர் மாரப்பன் தலைமை வகித்தார். திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்க மாநில ஒருங்கிணைப்பாளர் தேன்மொழி பேசுகையில், "பெண்கள் குறிப்பாக பெண் ஆசிரியர்கள் ஆரிய மாயைகளில் இருந்தும் மூடநம்பிக்கைகளில் இருந்தும் வெளியேற வேண்டும். பெண் விடுதலையால் மட்டுமே சமூக விடுதலை சாத்தியப்படும் என்பது திராவிடக் கருத்தியலின் அடிப்படைகளில் ஒன்று.

நவீன காலத்தில் பெண்களின் அடையாளங்களாக எவையெல்லாம் இருக்க வேண்டும், பெண்கள் எவ்வாறெல்லாம் செயல்பட வேண்டும் என்பது குறித்து திராவிடக்கருத்தியல் தெளிவான சிந்தனை வழிகாட்டுதலை கொண்டுள்ளது. அண்ணாவும், கலைஞரும் திமுக ஆட்சியில் தந்தை பெரியாரின் வழி நின்று கல்வி உரிமை, சொத்துரிமை, இட ஒதுக்கீடு முதலிய அடிப்படைப் பெண்ணுரிமைகளை சட்டபூர்வமாக நடைமுறைப்படுத்தியுள்ளனர். தற்போதைய திராவிட மாடல் அரசு, மாணவர்கள், பெண்களின் வளர்ச்சியை கவனத்தில் கொண்டு திட்டங்களை செயல்படுத்துகிறது" என்றார்

முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம் சிறப்புரையாற்றும்போது, "கீழடி அகழாய்வுமூலம் திராவிட தமிழ் நாகரீகம் என்பது இந்தியத் துணைக்கண்டத்தைக் கடந்து இந்தோனேசியா ஜாவா தீவுகள் என தெற்காசிய பரப்பு முழுவதும் பரவியுள்ளது. ஆசிரியர்கள் திராவிடக் கருத்தியலில் உறுதியாக இருந்து மாணவர்களை அறிவுப்பூர்வமாக வளர்த்தெடுக்க வேண்டும்." என்றார்.

முன்னதாக காமராசர் பல்கலைக்கழகம் முன்னாள் பேராசிரியர் நாகூர்கனி வரவேற்றார். பேரசிரியர் பழனிவேல் நன்றி கூறினார். முனைவர் க.சி.பழனிக்குமார் தொகுத்து வழங்கினார். 50 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பங்கேற்றனர்.



புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி ஸ்ரீ ஐயப்பன் கோவிலில் புரட்டாசி மாத அன்னதான கமிட்டி மண்டபத்தில் 6ம் ஆண்டு 18 படி சக்தி பூஜை குழுவினர்களால் நடைபெற்றது. பக்தர்கள் பக்தி பாடல்களை பாடினர். இதில் கருப்பசாமி பாடலுக்கு பக்தர்கள் சாமியாடி பரவசப்படுத்தினர். அலங்கரிக்கப்பட்ட 18 படிகளில் தீபம் ஏற்றி படி பூஜை நடைபெற்றது. பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை 18படி சக்தி பூஜை நண்பர்கள் செய்திருந்தனர்.



மதுரை ஊமச்சிகுளம் கடச்சனேந்தல் மெயின் ரோடு கணேஷ் மஹால் அருகில், சுபா மேக் ஓவர் அண்டு பேன்சி வேர்ல்ட் என்னும் புதிய கடையை நிஷாந்திக்கா மற்றும் சாய் கார்த்திக் திறந்து வைத்தனர். உடன் சுப்புலெட்சுமி மற்றும் ராஜபாண்டியன்.



புதுச்சேரி மாநில மக்கள் முன்னேற்றக் கழகத்தின் வழி காட்டு தலைவர்களில் ஒருவரான புதுச்சேரி விடுதலை வீரர் வி.சுப்பையாவின் நினைவு நாளையொட்டி நெல்லித்தொப்பு சிக்னலில் அமைந்துள்ள அன்னாரது சிலைக்கு கடந்த சனிக்கிழமை காலை பதினோரு மணி அளவில் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சேர்மன் ஆர்.எல். வெங்கட்டராமன் முன்னிலையில் கழகத்தின் தலைவர் பேராசிரியர் மு.ராமதாஸ் தலைமையில் மக்கள் முன்னேற்ற கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நினைவுநாள் நிகழ்ச்சியில் மாநில துணை தலைவர் நித்தியானந்தன், மாநில பொது செயலாளர் எ.மு.ராஜன், செயலாளர் சிவகுமாரன், மோகனசுந்தரம், துணைச்செயலாளர்ராதாகிருஷ்ணன், சுப்ரமணி, கலியபெருமாள், உதவி செயலாளர், ஆண்டாள், தனஞ்ஜெயன் , பிரகாஷ், கோமதி, கௌரி, பீட்டர் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

### சங்கரன்கோவிலில் அரசு மருத்துவமனையில் 9 கோடியில்

## முன்னோடி மருத்துவ கட்டிட பணிகள் மற்றும் டயாலிசிஸ் பிரிவை வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ ஆய்வு

சங்கரன்கோவில் : அக். 14

சங்கரன்கோவில் ராஜா எம்எல்ஏ சட்டமன்றத்தில் சங்கரன்கோவில் மருத்துவமனைக்கு புதிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.



கோரிக்கையை ஏற்ற முதல்வர் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சர் ஆகியோர் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் 9 கோடி மதிப்பீட்டில் மருத்துவ கட்டிடங்கள் கட்டுவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இதற்காக தமிழ்நாடு அரசு 9 கோடி நிதி ஒதுக்கியது. இந்நிலையில் புதிய மருத்துவ கட்டிடங்கள் கட்டுமான பணி தற்போது தொடங்கி நடந்து வருகின்றது. இதில் ஒரு கீழ்த்தளம் மற்றும் 3 மேல் தளங்களை உள்ளடக்கியதாக கட்டப்படும் இந்த கட்டிடத்தில் அவசர சிகிச்சை பிரிவு, அறுவை சிகிச்சை பிரிவு, உள் நோயாளிகள் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகள் செயல்பட உள்ளன. ஏற்கனவே தற்போது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் பல்வேறு வசதிகள் செய்யப்பட்டு நோயாளிகளுக்கு உயர்தரமான சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் நடைபெற்று வரும் புதிய கட்டிடங்களுக்கான கட்டுமான பணிகளை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ ஆய்வு செய்தார். தொடர்ந்து அரசு மருத்துவமனையில் உள்ள டயாலிசிஸ் பிரிவில் அளிக்கப்படும் சிகிச்சை மற்றும் அந்த சிகிச்சை பெறுவதற்கான பெறுபவர்களுக்கான தேவைகளை குறித்து கேட்டறிந்தார். இந்த ஆய்வின் போது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் செந்தில் சேகர், மருத்துவர் கலை மனோ பாரதி, திமுக நகர செயலாளர் பிரகாஷ், செவிலியர், கண்காணிப்பாளர்கள் விஜயலட்சுமி, பாலமுருகன் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

## பழனி அருகே பாலசமுத்திரத்தில் அதிமுக செயல்வீரர்கள் கூட்டம்

பழனி : அக். 14

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், பழனி, பாலசமுத்திரம் பேரூராட்சியில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு கூட்டம் தனியார் மண்டபத்தில் பேரூர் கழகச் செயலாளர் சக்திவேல் தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கழகத் துணைப் பொதுச்செயலாளரும், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், நத்தம் சட்டமன்ற உறுப்பினர் நத்தம் விஸ்வநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் செய்ய வேண்டிய கழகப் பணிகள் குறித்தும், மக்களுக்கு அதிமுக செய்த திட்டங்களை கொண்டு போய் சேர்க்கவும், விடியா திமுக ஆட்சியின் அவலங்களை எடுத்துரைத்து பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என ஆலோசனை வழங்கினார். திமுக அரசு கொடுத்த 520 வாக்குறுதிகளில் எதையுமே நிறைவேற்றப்படவில்லை என குற்றம் சாட்டினர். தமிழகத்தில் இந்த மோசமான திமுக அரசை போல இதுவரை நான் பார்த்ததே இல்லை என்று விமர்சனம் செய்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் எம்எல்ஏ வேணுகோபாலு, ஒன்றிய செயலாளர்கள் முத்துச்சாமி, மாரியப்பன், எம்ஜிஆர் மன்ற இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ரவி மனோகரன், எம்ஜிஆர் இளைஞர் அணி மாவட்ட செயலாளர் அன்வர் தின், பொதுக்குழு உறுப்பினர் ராஜா முகமது, தகவல் தொழில்நுட்ப பிரிவு மண்டல பொருளாளர் அப்துல் சமது, தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட துணைத்தலைவர் குகன், பேரூர் செயலாளர்கள் விஜயசேகர், சசிகுமார், சிறுபான்மை பிரிவு அக்கிம் ராஜா, நகர்மன்ற உறுப்பினர்கள் நடராஜன், சரவணன், மாவட்ட இளைஞரணி இணை செயலாளர் பன்னாடி ராஜா, கோபிநாத் மற்றும் சார்பு அணி, மகளிர் அணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அறந்தாங்கியில் மத்திய அமைச்சர் நிர்மலாசீதாராமனை கண்டித்து

## தமிழ்நாடு விஸ்வபிரம்ம மக்கள் பேரவை இயக்கம் சார்பில் கண்டன ஆர்பாட்டம்

அறந்தாங்கி : அக். 14,

ஆர்பாட்டத்திற்கு தமிழ்நாடு விஸ்வபிரம்ம மக்கள் பேரவை இயக்கத்தின் மாநில தலைவர் மாரி.சிங்காரம் தலைமை வகித்தார்.



ஆர்பாட்டத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் மத்திய அமைச்சர் கோவையில் விஸ்வபிரம்ம தொழிலை பிற தொழில்களுடன் ஒப்பிட்டு பேசிய உள்ளார். மத்திய அமைச்சரின் இந்த பேச்சு விஸ்வபிரம்ம தொழில் செய்பவர்கர்கள் மத்தியில் அதிர்ச்சியையும் வேதனையும் ஏற்படுத்தி உள்ளது. இதனால் மத்திய அமைச்சர் நிர்மலாசீதாராமண் மன்னிப்பு கூறவேண்டும் என கோஷம் எழுப்பினர்.

முன்னதாக பட்டுகோட்டை சாலையில் தமிழ்நாடு விஸ்வபிரம்ம மக்கள் பேரவை இயக்கத்தினர் மத்திய அமைச்சருக்கு எதிராக கோஷமிட்டு, முழங்க பேரணியாக வந்து அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். ஆர்பாட்டத்தில் மாநில அவைத் தலைவர், ராஜு மாவட்ட ஒருங்கிணைப்பு அமைப்பு செயலாளர் செல்வகுமார், மாவட்ட தலைவர் தெற்கு பிரபாகரன், மாவட்ட செயலாளர் தெற்கு சரவணன், கௌரவத் தலைவர் மருதமுத்து, ரவி, நித்யானந்தம், பரவக்கோட்டை, கீரமங்கலம், மேற்பனைக்காடு, குலக்குடி, உள்ளிட்ட கிளை பொறுப்பாளர்கள், அறந்தாங்கி ஒன்றிய பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மணமேல்குடியில் திமுக பவள விழாவை முன்னிட்டு இரு சக்கர வாகன பேரணி மற்றும் கொடியேற்று விழா





மணமேல்குடி : அக். 14

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், மணமேல்குடி வடக்கு ஒன்றிய திமுக சார்பில் திமுக பவள விழா மற்றும் துணை முதல்வராக உதயநிதி ஸ்டாலின் பொறுப்பேற்றதை கொண்டாடும் விதமாக இரு சக்கர வாகன பேரணி மற்றும் திமுக கொடி ஏற்று விழா மணமேல்குடி வடக்கு ஒன்றியத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றது.

கட்டுமாவடி கடைவீதியில் தொடங்கிய இரு சக்கர வாகன பேரணி இடையாத்தூர் ஊராட்சியில் முடிவடைந்தது. பேரணிக்கு மணமேல்குடி வடக்குஒன்றியதிமுகசெயலாளர் சக்தி ராமசாமி தலைமை தாங்கினார், கட்டுமாவடி, கிருஷ்ணாஜிபட்டினம், மும்பாலை, மணமேல்குடி, கரகத்திக்கோட்டை, மணலூர், பெருமருதூர், தினையாகுடி, நிலையூர், இடையாத்தூர், இடையாத்திமங்கலம் உள்ளிட்ட ஊராட்சிகளில்திமுக கொடி ஏற்றினார்.

பேரணி செல்லும் வழியில் திமுக பவள விழாவை முன்னிட்டு கோபாலபுரத்தில் வசித்து வரும் முதுபெரும் திமுக தொண்டர் முத்துசாமி என்பவர் வீட்டிற்கு சென்று முத்துச்சாமிக்கு ஒன்றிய செயலாளர் சக்திராமசாமி சால்வை அணிவித்தார்.

நிகழ்ச்சிக்கு தலைமை செயற்குழு உறுப்பினர் கலைமணி முன்னிலை வகித்தார். ஒன்றிய துணைச் செயலாளர்கள் வீரப்பன், மாலதி கணேசன், ஒன்றிய பொருளாளர் சாதிக், மாவட்ட பிரதிநிதிகள் குமரேசன், கணேசன், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விமலாதிராஜன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் முகமது நலீம், மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் நாகராஜன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர்கள் ரமேஷ், செந்தில்வேலன், மாவட்ட சிறுபான்மையினர் பிரிவு துணை அமைப்பாளர் குத்புதீன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் ஜோதி, அறந்தாங்கி தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தினையாகுடி செந்தில்வேலன், திமுக நிர்வாகிகள் சிவசுப்பிரமணியன், பிரபு ராமன், விக்னேஸ்வரன், தீபன் ஆவுடையப்பன், வினோத் குமார், ஜானகிராமன், ராஜா, ஊராட்சி மன்ற தலைவர்கள் முத்துக்குமார், குமாரசாமி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## பொன்னமராவதி அருகே காரையூரில் ஒன்றிய அளவிலான பஞ்சாலைகளில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம்

பொன்னமராவதி : அக். 14

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி ஒன்றியம் காரையூரில் ரோஸ் நிறுவனம், டி.டி.எச் நிறுவனம் இணைந்து வளர் இளம் பெண்கள், ஒன்றிய அளவிலான பஞ்சாலைகளில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கான கலந்தாய்வு விழிப்புணர்வு கூட்டத்தை நடத்தினர்.



காரையூர் சமுதாய கூடத்தில் நடைபெற்ற வளர் இளம் பெண்கள், ஒன்றிய அளவிலான பஞ்சாலைகளில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கான கலந்தாய்வு விழிப்புணர்வுக்கு நிகழ்விற்கு ரோஸ் நிறுவன இயக்குநர் ஆதப்பன், மேலத்தானியம் ஊராட்சி மன்றத்தலைவர் முருகேசன், காரையூர் ஊராட்சி மன்றத்தலைவர் முகமது இக்பால், கவுன்சிலர் வளர்மதி முருகேசன், அரசமலை ஊராட்சி மன்றத்தலைவர் பழனிவேல் ஆகியோர் தலைமை தாங்கினார். ரோஸ் நிறுவன சமுதாய ஒருங்கிணைப்பாளர்கள் சாத்தனூர் புவனேஸ்வரி வரவேற்புரை ஆற்றினர்.

பின்னர் தொடங்கிய விழிப்புணர்வில் வளர் இளம் பெண்கள் மன ரீதியாக பாதிப்புகுள்ளாகும் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள், உடல் பருவநிலை மாற்றம், உணவு உட்கொள்ளும் வழி முறைகள், வலைத்தள பயன்பாட்டினால் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் பற்றி விழிப்புணர்வை வளர் இளம் பெண்களுக்கு திருமயம் வட்டார வளர்சி அலுவலர் கர்ப்புக்கரசி விளக்கி கூறினார்கள்.

மேலும் இவ்விழிப்புணர்வில் பெண் குழந்தைகளுக்கு சம வாய்ப்பு, சம உரிமைகிடைப்பதை உறுதி செய்ய வேண்டும், பெண்கள் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டும் என்றும், நம் நாட்டின் முக்கிய தொழிலான வேளாண் தொழிலுக்கு அடுத்து அதிக வேலை வாய்ப்பைக் கொடுக்கும் தொழிலாக ஆயத்த ஆடை தொழிலே ஆகும் எனவும். படிக்கும் பருவத்திலே வளரிளம் பெண்கள் அதிக அளவில் பஞ்சாலைகளில் வேலைக்கு செல்வதை தவிர்க்க வேண்டும்,பெண் உரிமைகளை பாதுகாப்பது, பாலின பாகுபாட்டைக் களைப்பது போன்ற விழிப்புணர்வை ரோஸ் நிறுவன இயக்குநர் ஆதப்பன் எடுத்துரைத்தார்.

மேலும் காரையூர் காவல்துறை சார்பில் பெண்கள் மத்தியில் பேசிய தலைமை காவலர் விமலாம்பாள் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் பற்றியும், குழந்தைகளுக்குரிய சட்டப் பாதுகாப்பு குறித்தும், குழந்தை திருமணம், POCSO சட்டம், உதவி எண்கள் 181, 1098 குறித்தும் மற்றும் சைபர் கிரைம் (1930) குற்றங்கள் குறித்தும், பட்டியல் இனம் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மீதான வன்கொடுமைகள் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தினார்.

மேலும் பெண்கள் மத்தியில் பேசிய காரையூர் காவல் நிலைய தலைமை காவலர் கலா பெண் குழந்தைகளின் சுய பாதுகாப்பு, தீயவர்களிடமிருந்து எவ்வாறு தற்காத்து கொள்வது, மற்றும் பள்ளி குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்து புகார் அளிப்பதற்கான உதவி எண் 14417 மற்றும் பள்ளி குழந்தைகள், இலவச சட்ட ஆலோசனை மைய உதவி எண் 15100 போன்றவை குறித்து விளக்கி கூறினார்.

இந்த விழிப்புணர்வில் அக்டோபர் 13 ஆம் தேதி நேற்று மார்பகப் புற்றுநோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும்,'NO BRA DAY' கடைப்பிடிக்கப்படுகிறது என்று பெண்கள் மத்தியில் தொண்டு நிறுவன பணியாளர் அகிலா மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இவ்விழிப்புணர்வில் ரோஸ் தொண்டு நிறுவனத்தின் பணியாளர்கள், டி.டி. எச் நிறுவனத்தின் பிடிசி திட்டப்பணியாளர்கள், அங்கன்வாடி மேற்பார்வையாளர் பள்ளி மேலாண்மைக் குழுவினர், பெண்கள், பொதுமக்கள், நிறுவன பணியாளர்கள் ஜீவானந்தம், கஸ்தூரி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் தையல் ஆசிரியர் சரண்யா நன்றி தெரிவித்துக் கொண்டார்.

14.10.2024 ❖ வரலாறு

# திருப்பூர் மாநகர புதிய போலீஸ் கமிஷனர் லட்சுமியின் "ஆபரேஷன் ஜீரோ கிரைம் " திட்டத்தின் அதிரடி

திருப்பூர், அக்,14

திருப்பூர் மாநகர போலீஸ் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் சட்டவிரோத செயல்கள் மீது புதிய போலீஸ் கமிஷனராக பொறுப்பேற்று இருக்கும் லட்சுமி அதிரடியாக நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார்.

திருப்பூர் மாநகர போலீஸ் துறையை பொறுத்த வரை குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு ஒரு முறை பலவிதமான அதிகாரிகள் வந்து சென்றுள்ளனர். அதில், ஒரு சிலர் மட்டுமே தங்களின் துணிச்சலான நடவடிக்கை காரணமாக மக்கள் மத்தியில் பெயர் பெற்று விடுகின்றனர். அவ்வகையில், கடந்த, இரு மாதத்திற்கு முன், கமிஷனராக பொறுப்பேற்ற லட்சுமி அவ்வாறு



செயலாற்றி வருகிறார். இவர் இதற்கு முன் பணியாற்றிய இடங்களில் தன்னுடைய அதிரடியான, நேர்மையான நடவடிக்கையால் பலராலும் பாராட்டப்பட்டவர். இவர் பொறுப்பேற்ற பின், திருப்பூர் மாநகரில் குற்றங்களை தடுக்கவும், குறைக்கவும் என, ஒவ்வொன்றுக்கும் தனிப்படைகள் அமைத்துள்ளார் குற்றங்களை தடுத்து இளைய சமுதாயத்தினரை நல்வழிப்படுத்தவும், குற்றப்பின்னணி அறிந்து, கவுன்சிலிங் வழங்கவும் 'ஆபரேஷன் ஜீரோ கிரைம்' திட்டத்தை சமீபத்தில் அமல்படுத்தினார். இதுபோன்று ஒவ்வொரு விஷயங்களாக நகரில் கண்காணித்து, குற்றவாளிகளுக்கு சிம்ம சொப்பனாக மாறி, பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்து முனைப்போடு பணியாற்றி வருகிறார்.

அதுமட்டுமல்லாமல், போலீசார் பணியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டாலும், அதிரடியாக நடவடிக்கை எடுத்து வருகிறார் இந்த வரலாற்று சிங்கப்பெண் கமிஷனர் லட்சுமி ஆவார், இவரின் அதிரடி நடவடிக்கைகளை கண்டு திருப்பூர் மாநகர மக்கள் வியந்து பாராட்டி வருகின்றதும் குறிப்பிடத்தக்க விசயங்களில் ஒன்றாகும்.



▶ மருத்துவர் அன்புமணி ராமதாஸ் 56வது பிறந்த நாளை முன்னிட்டு கள்ளக்குறிச்சி கிழக்கு மாவட்டம் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட வேங்கூர் ஊராட்சியில் ஒன்றிய செயலாளர் பா சக்திவேல் தலைமையில் ஒன்றிய தலைவர் வழக்கறிஞர் ராம் குமார் முன்னிலையில் பாட்டாளி மக்கள் கட்சியின் கொடியை ஏற்றி 500 பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு, மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. பின்பு பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்கப்பட்டது. இதில் சிறப்பு அழைப்பாளராக தலைமை நிலைய செயலாளர் அன்பழகன் மாவட்ட தலைவர் வழக்கறிஞர் சங்கத் தலைவர் திருக்கோவிலூர் எஸ் கே ராஜ்குமார் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் தேசிய தொழில்நுட்ப சிந்தனை அரங்கம்



திருவள்ளூர், அக். 14-

ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் தேசிய தொழில்நுட்ப சிந்தனை அரங்கம் நடைபெற்றது. இதில் ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளையின் தலைவர் முனைவர் ஆர்.நாராயணசாமி, மற்றும் முனைவர் பி.கோவிந்தராஜூலு ஆகியோர் தலைமை வகித்தனர். சிறப்பு விருந்தினராக பி.செலினா கலந்து கொண்டார்.

மாணவி கே.ஸ்ரீநாராயணி வரவேற்புரை வழங்கினார். இதனை தொடர்ந்து பேசிய ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் பி.ஆர்.ரமேஷ்பாபு அனைவரையும் வரவேற்று சிந்தனை அரங்கத்தின் முக்கியத்துவம் பற்றி கூறினார். ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளையின் தலைவர் முனைவர் ஆர் நாராயணசாமி சிறப்பு அழைப்பாளர்களுக்கு சால்வை அணிவித்து, நினைவு பரிசு வழங்கினார். சிந்தனை அரங்கத்தில் 420 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் பி.ஆர்.ரமேஷ்பாபு தலைமையில் பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் இறுதியாக மௌனிகா நன்றியுரை வழங்கினார்.

# முரசொலி செல்வம் மறைவுக்கு செஞ்சி தி.மு.க சார்பில் இரங்கல்

செஞ்சி, அக்-14.

முரசொலி நாளிதழின் ஆசிரியரும் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மருமகனுமான முரசொலி செல்வம் மாரடைப்பு காரணமாக காலமானார். அவரது மறைவுக்கு திமுகவினர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் முரசொலி செல்வம் மறைவுக்கு முதல்வர் ஸ்டாலின் உருக்கமாக இரங்கல் தெரிவித்துள்ள நிலையில், அதனை தொடர்ந்து பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும் நேரில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி நகர,ஒன்றிய தி.மு.க



சார்பில் செஞ்சி அஞ்சுகம் அம்மாள் பேருந்து நிலையம் எதிரில் அமைக்கப்பட்டிருந்த முரசொலி செல்வம் அவர்களின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், செஞ்சி திமுக நகர செயலாளர் கார்த்தி, மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நெடுஞ்செழியன், தொண்டரணி சோடா பாஷா, சேகர்,சார்லஸ், கமல், ஆதாம், ஹாஜி, குமார் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



▶ சுற்றுச்சூழல் காக்க இந்தியாவை சைக்கிளில் சுற்றி வரும் இலங்கையின் ஆசிரியர் பிரதாபன் தர்மலிங்கம் 111 வது நாள் சைக்கிள் பயணத்தின் போது தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள, இராம்நாடு ராயல்ஸ் ரோட்டரி கிளப்பின் செயலாளர் விக்னேஸ்வரன், முன்னாள் துணை ஆளுநர்.அருண்பிரஷாத், துணை ஆளுநர் கார்த்திகேயன் மற்றும் உறுப்பினர்களும் இணைந்து, இராமநாதபுரம் நகரில் வைத்து மிகச்சிறப்பாக அவரை வரவேற்று, சால்வை அணிவித்து, கௌரவப்படுத்தி, வழியனுப்பி வைத்தனர்.

## வெல்ஸ்பன் நிறுவனம்,மதர் தெரசா எஜுகேசனல் டிரஸ்ட் மற்றும்

# தூய தெரசா பெண்கள் கல்லூரி இணைந்து நடத்திய சர்வதேச பெண் குழந்தைகள் தின விழா



தரங்கம்பாடி, அக். 14:

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி திருக்கடையூர் அடுத்து டி.மணல்மேடு கிராமத்தில் வெல்ஸ்பன் பவுண்டேஷன் ஹெல்த் & நாலேஜ் நிறுவனம் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் CSR திட்டத்தினை மதர் தெரசா எஜுகேசனல் டிரஸ்ட் செயல்படுத்தி வருகிறது.

இதன் CSR திட்டத்தின் கீழ் தரங்கம்பாடி தூய தெரசா மகளிர் கல்லூரியுடன் இணைந்து சர்வதேச பெண் குழந்தைகள் தின விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் 200 மாணவிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் டாக்டர் காமராசன் அவர்கள் தலைமை தாங்கினார். கல்லூரி செயலர் அருட் சகோதரி கருணா ஜோசபாத் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

பெண் குழந்தைகளின் வளர்ச்சிக்கு சமூக ஊடகம் சாதகமே/ பாதகமே என்ற தலைப்பில்கல்லூரிமாணவிகள் இணைந்து நடத்திய பட்டிமன்றம் நடைபெற்றது. முதல்வர் நடுவராக இருந்து சிறப்பாக நடத்தினார். விழிப்புணர்வு பாடல்களையும் பாடி மகிழ்வித்தனர். வெஸ்பன் நிறுவன CSR திட்ட அலுவலர் ஜூலியஸ் தூயமணி நிகழ்ச்சியில் நோக்கம் குறித்து பேசினார்.மேலும் கலந்து கொண்ட மாணவிகளுக்கு நினைவுப் பரிசுகளையும் வழங்கினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தமிழ்த்துறை உதவிப் பேராசிரியை இந்துமதி அவர்கள் சிறப்பாகச் செய்திருந்தார். கல்லூரி பேராசிரியர்கள், மதர் தெரசா எஜுகேசனல் டிரஸ்ட் பணியாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மதர் தெரசா எஜுகேசனல் டிரஸ்ட் திட்ட இயக்குனர் இராமர் நன்றி கூறினார்.

# செஞ்சி நகர அ.இ.அ.தி.மு.க சார்பில் செயல் வீரர்கள் கூட்டம்



செஞ்சி, அக்-14.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி நகர அ.தி.மு.க சார்பில் செயல் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கூட்டம் செஞ்சி தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு விழுப்புரம் மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞர் அணி செயலர் வி.ஆர்.பிரித் விராஜ் தலைமை தாங்கினார். நகர அவைத்தலைவர் கராத்தே பசுபதி, கவுன்சிலர் அகல்யா வேலு ஆகியோர்கள் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அமைச்சரும், அ.இ.அ.தி.மு.க மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சி.வி. சண்முகம் கலந்து கொண்டு நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

அப்பொழுது பேசிய மாவட்ட கழக செயலாளர் சி.வி சண்முகம் புரட்சித்தலைவி அம்மா சொன்னது போல் கழகம் நூறு ஆண்டுகள் மக்கள் சேவை செய்ய வேண்டும் என்றால் நாம் கடுமையாக உழைக்க வேண்டும் என்றும், அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டியாக இருக்கும் இளைஞர்களை ஊக்கப்படுத்தி, இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்கி அதிக அளவில் இளைஞர்கள் மற்றும் மகளிரை களத்தில் செயல்பட வேண்டும் என்று கேட்டு கொண்டார்.

நிகழ்ச்சியில் எம்.ஜி.ஆர். மன்ற மாவட்ட துணை செயலர் வி.ரங்கநாதன், மாவட்ட அவைத்தலைவர் கு.கண்ணன், இளைஞர் அணி சரவணன், நகர அம்மா பேரவை செயலாளர் திருமலை, மாவட்ட பிரதிநிதி சுரேஷ் ராஜகுமாரி, இலக்கிய அணி கமலக்கண்ணன், செஞ்சி பணிமனை செயலாளர் ஜாகிர் உசேன், நகர இளைஞரணி பொருளாளர் விஜி,நகர பாசறை செயலாளர் மணிமாறன், தொகுதி பொறுப்பாளர் வேலவன், வர்த்தகர் அணி சக்திவேல், பாலா, உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கள்ளக்குறிச்சி மாவட்டம்: சிறுதானிய உணவு ஊட்டச்சத்து திருவிழா



கள்ளக்குறிச்சி : அக். 14,

மூங்கில்துறைப்பட்டு அடுத்த ரங்கப்பனூரில் சிறுதானிய உணவு ஊட்டச்சத்து திருவிழா நடந்தது. ஊராட்சி தலைவர் அர்ச்சனா காமராஜன் தலைமை தாங்கினார். வட்டார ஒருங்கிணைப்பாளர் தனலட்சுமி, கணக்காளர் சந்திரலேகா, செயலாளர் பிரபாவதி, தேவி, நதியா, பொருளாளர் காவியா, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் அனைத்து மகளிர் சுய உதவி குழுவினர் பங்கு பெற்றனர். அவர்கள் சமைத்த ஊட்டச்சத்து உணவு களை பார்வைக்கு வைத்தனர். பொதுமக்கள் அவற்றினை சாப்பிட்டு சிறந்த உணவு செய்த மகளிர் குழுவை தேர்வு செய்தனர்.

முதல் பரிசாக ஈஷா குழு அஞ்சுகம், இரண்டாவது பரிசாக கண்மணி குழு அர்ச்சனா, மூன்றாவது பரிசாக தென்றல் குழு காவியா மற்றும் ஆறுதல் பரிசு இரண்டு குழுக்களுக்கு வழங்கப்பட்டது.

# திருச்சி பவர் குரூப் நிறுவனத்தின் முதல் கிளை புதுக்கோட்டை திறக்கப்பட்டது

புதுக்கோட்டை : அக். 14,

திருச்சி பவர் குரூப் நிறுவனத்தின் முதல் கிளையை புதுக்கோட்டை எம்எல்ஏ முத்துராஜா திறந்து வைத்தார்.

திருச்சி பவர் குரூப் நிறுவனத்தின் முதல் கிளையை புதுக்கோட்டை மாநகரில் பவர் குரூப் நிறுவனத் தலைவர் அப்துல் காதர் முன்னிலையில் எம்எல்ஏ முத்துராஜா நேற்று திறந்து வைத்தார். விழாவில் சிஇஓ மற்றும் டைரக்டர்கள் ரியாஸ்கான், செந்தில்குமார், மோகன், கிருஷ்ணகுமார், சரவணன், செல்வக்குமார், ரமேஷ் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர். விழாவில் அப்துல் பேசுகையில்: எளிய மற்றும் நடுத்தர மக்களுக்காக அவர்களது கனவு இல்லம்



மனையை நியாயமான விலையில் வழங்குகிறோம். அதேபோல் முழு நேர பகுதி நேரமாகவேலைவாய்ப்பினையும் வருமானம்ஈட்டும்பணிகளையும் அளிக்கின்றோம். இதனை புதுக்கோட்டை மக்கள் அனைவரும் பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என்றார்.

நிகழ்வில் புதுக்கோட்டை மாநகர் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் மற்றும் கவுன்சிலர் சுபசரவணன், ஆம் ஆத்மி புதுக்கோட்டை மாவட்டத் தலைவர் அப்துல் ஜப்பார், விசிக புதுகை வடக்கு மாவட்ட செயலாளர் இளமதி உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை புதுக்கோட்டை டைரக்டர்கள் ராம்குமார் மற்றும் செல்வராஜ் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# கள்ளக்குறிச்சி மாவட்டம்: முதலிடம் பிடித்த பள்ளி மாணவருக்கு பாராட்டு



கள்ளக்குறிச்சி, அக்,14

மாவட்ட அளவிலான ஓவிய போட்டியில் முதலிடம் பிடித்த சிறுவங்கூர் அரசு பள்ளி மாணவருக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு கலை பண்பாட்டு துறை மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றம் சார்பில், கள்ளக்குறிச்சி மாவட்ட அளவில் 6 வயது முதல் 16 வயது வரையிலான பள்ளி மாணவ மாணவிகளுக்கு குரலிசை, பரதநாட்டியம், ஓவியம், கிராமிய நடனம் உள்ளிட்ட கலை போட்டிகள் நடந்தன.

கள்ளக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடந்த இப்போட்டியில் மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகள் பங்கமேற்றனர். சிறுவங்கூர் அரசு நடுநிலைப் பள்ளியின் 8ம் வகுப்பு மாணவர் அஸ்வின், ஓவியப் போட்டியில் மாவட்ட அளவில் முதலிடம் பிடித்தார். அவரை, மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் ஜோதிமணி சான்றிதழ் வழங்கி பாராட்டி வாழ்த்தினார். தலைமையாசிரியை சுகுணா மற்றும் ஆசிரியர்கள் உடனிருந்தனர்.

## புதுக்கோட்டை யூரோ கிட்ஸ் பள்ளியில்

# விஜயதசமி நாளில் ஆர்வமுடன் மழலையர்களை அழைத்து வந்து பெற்றோர்கள் சேர்ந்தனர்

புதுக்கோட்டை : அக். 14,

புதுக்கோட்டை மறைமலை நகரில் உள்ள யூரோ கிட்ஸ் மழலையர் பள்ளியில் விஜயதசமி நாளில் ஆரம்ப கல்வி கற்க ஆர்வமுடன் வந்த மழலையர் அனைவரையும் பள்ளியின் தாளாளர் கவிஞர் ஆர்எம்வீ.கதிரேசன் வரவேற்றார். பள்ளியின் ஆலோசகர் கலைசெல்வி, முதல்வர் தேவிகீர்த்தனா, ஆசிரியைகள், பெற்றோர்கள் இணைந்து குத்து விளக்கேற்றி வைத்தனர்.



பின்னர் புதிதாக பள்ளியில் சேர்ந்த மழலையர்களுக்கு பெற்றோர்களுடன் அமர வைத்தது மழலையர்களின் விரல் பிடித்து அரிசியில் 'அ' என்கிற எழுத்தையும் தனது பெயர்களையும் எழுத வைத்தனர். கல்வி கற்க வருகை தந்த குழந்தைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள், பலூன்கள் மற்றும் எழுதுபொருட்களை தாளாளர் கவிஞர் ஆர்எம்வீ. கதிரேசன் வழங்கி வாழ்த்தினர். அவர் பேசுகையில் விஜயதசமி நாளில் கல்வி, கலைகள் என இந்நாளில் எது தொடங்கினாலும் ஜெயமாக முடியும் என்பது நம்பிக்கை. குழந்தைகளின் கை பிடித்து, பரப்பி வைத்திருக்கும் அரிசியில் 'அ' என்று எழுத கற்றுக் கொடுப்பது வித்யாரம்பம் எனப்படுகிறது. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான். அவ்வாறு மிக முக்கியமாக குழந்தைகள் கற்கும்போது முதலில் அரிசி அல்லது நெல்லில் எழுதச் சொல்வது சடங்காக பின்பற்றுவது வழக்கம்.

குரு மற்றும் சரஸ்வதியின் ஆசியுடன் தொடங்கும் ஞானத்தின் தேடல் என்ற நிகழ்வானது ஒரு பாரம்பரிய சிறப்புகளில் ஒன்றாக இருக்கிறது. மழலை குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பதற்கு இந்த நாளில் தொடங்கினால் சரஸ்வதி தேவியின் அருள் பரிபூரணமாக கிடைக்கும் என்று கூறினார். பின்னர் மழலையர்கள் வகுப்பறையில் அமர்ந்தும் விளையாட்டு உபகரணங்கள் மூலம் விளையாடி மகிழ்ந்தனர். நிகழ்வில் மருத்துவர்கள், பேராசிரியர்கள், சமூக ஆர்வலர்கள், பெற்றோர்கள், உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். யூரோ கிட்ஸ் மழலையர் பள்ளி முதல்வர் தேவிகீர்த்தனா, ஆசிரியைகள் ஏற்பாடுகளை செய்தனர்.

# சேந்தமங்கலம் பள்ளிவாசலில் மாவட்ட அளவிலான மீலாது நபி விழா



தரங்கம்பாடி, அக் 14:

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பட்டி தாலுக்கா சங்கரன்பந்தல் அருகே சேந்தமங்கலம் கிராமத்தில் ஜாமிஆ மஸ்ஜித் மற்றும் அல் மதரஸத்துல் கதிஜா அம்மாள் சார்பில் மயிலாடுதுறை மாவட்ட அளவிலான மாபெரும் மீலாது நபி விழா நடைபெற்றது.

விழாவிற்கு சேந்தமங்கலம் ஜாமிஆ மஸ்ஜித் மூத்தவல்லி எம். சபீர் அஹமது தலைமை வைத்தார், கௌரவத் தலைவர்கள் எஸ். ஷாஜகான், பெரியதம்பி எம்.எல் ஹுசைன், முகமது ரபீக், ஜியாவுதீன் ஆகிய முன்னிலைத்தனர்.

இதில் சிறப்பு அழைப்பாளராக பேராசிரியர் எம். முகமது அபுதாஹிர், கோவை பேச்சாளர் சுல்தானா பர்வீன், முன்னாள் இமாம் முகமது புஹாரி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

விழாவில் 1500 -க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை ஜமாஅத் நிர்வாகிகள் மற்றும் மதரஸா கமிட்டி உறுப்பினர்கள், ஜமாத் தார்கள் செய்திருந்தனர்.

# பழனி கூட்டுறவு சேமிப்பு கிடங்கில் உணவுத்துறை செயலர் ராதாகிருஷ்ணன் ஆய்வு



பழனி : அக். 14

பழனியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிடங்கில் உணவுத்துறை செயலர் ராதாகிருஷ்ணன் நேற்று ஆய்வு செய்தார். கிடங்கில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அரிசி, பருப்பு உள்ளிட்ட அவற்றின் தரத்தை ஆய்வு செய்தார்.

மேலும் பாமாயில், சர்க்கரை உள்ளிட்ட பொருள்களின் இருப்பு குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். தொடர்ந்து நியாய விலை கடைகளுக்கு தேவைக்கேற்ப பொருட்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும். மழைக்காலம் துவங்கி விட்டதால் நியாய விலை கடைகளில் தட்டுப்பாடு இன்றி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருள்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும் நியாய விலைக் கடைகளில் பொருட்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதா என்று அதிகாரிகள் ஆய்வு செய்து உறுதி செய்ய வேண்டும் என உத்தரவிட்டார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசியதாவது: தமிழகத்தில் கூட்டுறவு,அங்காடிகள் மூலம் 37 ஆயிரம் கடைகள் செயல்பட்டு வருகின்றன. அந்த நியாய விலை கடைகளுக்கு அரிசி, பருப்பு, பாமாயில் உள்ளிட்ட பொருட்களை கொண்டு சேர்ப்பதை அதிகாரிகள் செய்து வருகின்றனர். தமிழகத்தில் குடும்ப அட்டைதாரர்கள் எந்த நியாய விலை கடையில் வேண்டுமானாலும் பொருட்களைப் பெற்றுக் செல்லும் முறை நடைமுறையில் உள்ளது.

அதற்கு ஏற்ப நியாய விலைக் கடைகளில் பொருட்கள் இருப்பு வைக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், ஒரு சில நியாய விலை கடைகளில் வெளி மாவட்டத்தில் இருந்து வந்த நபர்கள் பொருட்களை வாங்க செல்லும்போது தடங்கல் உள்ளதாகவும் அவற்றை நிவர்த்தி செய்து நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் தற்போது மழை காலம் தொடங்கிவிட்ட நிலையில் தாழ்வான இடத்தில் அமைக்கப்பட்டுள்ள கடைகளில் உள்ள பொருட்களை பாதுகாப்பான இடத்தில் வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெள்ளம் மற்றும் கனமழை பெய்துள்ள இடங்களில் பொதுமக்களுக்கு பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தமிழக முதல்வரின் உத்தரவின் பேரில் தமிழகத்தில் உள்ள நியாய விலைக் கடைகள் புனரமைப்பு பணி நடைபெற்று வருகிறது. 37 ஆயிரம் கடைகளில் 6000 கடைகள் புதிதாக கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மேலும் அதனை அதிகப்படுத்தி ஆண்டுக்கு பத்தாயிரம் கடைகள் கட்டிக் கொடுக்க இலக்கு நிர்ணயித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.



மதுரை கீழ அவனி முள்ள விதி ஜெயம் புக் சென்டரில் கவிப்பேரரசு வைரமுத்து புதல்வன் கபிலன் வைரமுத்து எழுதிய மாக்கியவல்லி காப்பியம் விற்பனை நிகழ்வில் கலந்துகொண்டு வாடிக்கையாளர்களை சந்தித்து உரையாடினார். ஓய்வுபெற்ற நீதி அரசர் எம்.மாயாண்டி. தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பில் மாவட்டச் செயலாளர் கே.அழகேசன், மாவட்ட பொருளாளர் கே.பி.லஷ்மிகாந்தன், மாவட்டத் துணைத் தலைவர் நவீன், எம்.வெங்கடேசன் வழக்கறிஞர், எம்.ஆர்.கிருஷ்ணகுமார், மிட்டாய் பிஸ்கட் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் என்.பாண்டியன், மாவட்டத் துணைத் தலைவர் ஜி.கே.ராஜேந்திரன், ராஜ் ஆனந்த், சரண், பிரனேஷ், பால ராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு ஆசிரியருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

# உலக புகழ்பெற்ற குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் திருக்கோவில் தசரா திருவிழா



குலசேகரன்பட்டினம் : அக். 14

தூத்துக்குடி மாவட்டத்தில் உலக புகழ்பெற்ற குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் திருக்கோவில் தசரா திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான மகிஷா சூரசம்ஹாரம் நேற்று முன்தினம் சனிக்கிழமை கோவில் கடற்கரையில் நடைபெற்றது. பல லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு ஓம் காளி, ஜெய் காளி என்ற கோசத்துடன் அம்மனை வழிபட்டனர்.

உலக புகழ்பெற்ற தசரா திருவிழா மைசூர்க்கு அடுத்ததாக குலசேகரன்பட்டினத்தில் அருள்தரும் முத்தாரம்மன் திருக்கோவிலில் ஆண்டுதோறும் தசரா திருவிழா வெகு விமர்சையாக நடைபெறும். நவராத்திரியை முன்னீட்டு நடைபெறும் தசரா திருவிழா இந்தாண்டு கடந்த 03-ம் தேதி கொடியேற்றத்துடன் கோலாகலமாக தொடங்கியது. தொடர்ந்து 12 நாட்கள் வெகு விமர்சையாக நடைபெறும் தசரா திருவிழாவில் தினமும் இரவு அம்மன் துர்க்கை அம்மன், நவநீதகிருஷ்ணர் மற்றும் பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட பல்வேறு அவதாரக்கோலங்களில் வெவ்வேறு வாகனத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். விழாவின் சிகர நிகழ்ச்சியான 10-ம் திருநாள் மகிஷா சூரசம்ஹாரம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு கோவில் கடற்கரையில் நடைபெற்றது. இதில் தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலத்திலிருந்தும் பல லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். இதில் 41 நாட்கள், 21 நாட்கள் என வேண்டுதலுக்கிணங்க மாலை அணிந்துவிரதமிருந்த பக்தர்கள் காப்பு கட்டி காளி, அம்மன், ராஜா, ராணி, குறவன், குறத்தி, உள்ளிட்ட பல்வேறு வேடங்கள் அணிந்து தனித்தனியாகவும், குழுக்களாகவும் வீடு, வீடாக சென்று பெற்ற காணிக்கையை கோவில் உண்டியலில் செலுத்தி தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றினர். மகிஷா சூரசம்ஹாரம் நிகழ்ச்சி நடைபெறுவதையொட்டி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் மகா அலங்கார தீபாராதனை நடைபெற்றது. அதனை தொடர்ந்து நள்ளிரவு 12 மணிக்கு அம்மன் மஹிஷா சூரமர்தினி அவதாரக்கோலத்தில் எழுந்தருளி கடற்கரை வந்தார். முதலில் தன் முகத்துடன் இருந்த மஹிஷாசூரனை அம்மன் வதம் செய்தார். பின்னர் சிங்கமுகமாக உருவம் பெற்றவனையும் வதன் செய்தார். தொடர்ந்து எருமை முகம் பெற்ற சூயனையும், முடிவில் சேவல் உருவமாக மாறிய மஹிசாசூரனையும் வதம் செய்தார். இதில் பல லட்சக்கணக்கான பக்தர்கள் ஓம் காளி, ஜெய் காளி என்ற கோஷத்துடன் அம்மனை வழிபட்டனர். கோவில் கடற்கரையில் பக்தர்கள் வெள்ளத்தில் மிதந்தது. இதற்காக 4000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் 50 இடங்களில் 250 கண்காணிப்பு கேமரா மூலம் கண்காணித்து வந்தனர். பக்தர்கள் வசதிக்காக சுமார் சிறப்பு 200 பேருந்துகள் இயக்கப்பட்டது.

# ஐ.நா.பொதுச் செயலாளருக்கான இஸ்ரேல் தடையை இந்தியா கண்டிக்காதது ஏன்? – ப.சிதம்பரம்



புதுடெல்லி : அக். 14,

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அண்டோனியா குத்ரேஸ் இஸ்ரேலிய எல்லைக்குள் நுழைய அந்நாடு தடைவிதித்திருப்பதைக் கண்டிக்கும் கடிதத்தில் இந்தியா கையெழுத்திடாதது குறித்து காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தியாவின் நிலைப்பாட்டை விளங்கிக்கொள்ள முடியாதவை என்று விமர்சித்துள்ள சிதம்பரம், இது இந்தியாவின் பிரிக்ஸ் (BRICS) கூட்டாளிகள், பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்கா, பெரும்பானமையான தெற்குஉலகுக்குஎதிரானது என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முன்னாள் நிதியமைச்சர் சிதம்பரம் தனதுட்விட்டர்பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "ஐக்கியநாடுகளின்பொதுச் செயலாளர் தங்களின் எல்லைக்குள் நுழைய தடைவித்தித்திருக்கும் இஸ்ரேலைக் கண்டிக்கும் கடிதத்தில் கையெழுத்திட்டிருக்கும் 104 நாடுகளில் இந்தியா ஏன் இணைந்து கொள்ளவில்லை என்று விளங்கிக்கொள்ள முடியவில்லை.இதன்மூலம் இந்தியா அதன் BRICS கூட்டாளிகளான பிரேசில், தென்னாபிரிக்காவின் புரிதல்களை முறித்துள்ளது. மேலும்இந்தியாவுடன்நட்பு மற்றும் நல்லுறவுகளைப் பேணும் தெற்காசியா, மேற்காசியா மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளின் உறவினையும் முறித்துக் கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் என்பவர் அரசியலுக்குஅப்பாற்பட்ட ஓர் அலுவலர். அரசியல் வேறுபாடுகளை வெளியேற்றுவதற்கு இருக்கும் ஒரே சர்வதேச அமைப்பு ஐக்கிய நாடுகள் சபையே. தங்கள் நாட்டுக்குள் ஐ.நா. சபை பொதுச் செயலாளர் நுழைய இஸ்ரேஸ் தடைவிதித்திருப்பது மிகவும் தவறானது. இஸ்ரேலின் செயலைக் கண்டிக்கும் கடிதத்தில் கையெழுத்திடும் முதல் நாடாக இந்தியா இருந்திருக்க வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.

சிரியாவால் முன்மொழியப்பட்டு, ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் உட்பட 104 நாடுகள் ஆதரவு தெரிவித்த அந்த கண்டனக் கடிதத்தில், இஸ்ரேலின் முடிவுக்கு கண்டனம் தெரிவித்திருப்பதுடன், இந்த நடவடிக்கை மோதல்களுக்குமத்தியஸ்தம் செய்யும், மனிதாபிமான உதவிகளைச் செய்யும் ஐக்கிய நாடுகள் சபையின் திறனை குறைமதிப்புக் குள்ளாக்குகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய ராக்கெட் தாக்குதலைக் கண்டிக்காத நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அண்டோனியோ குத்ரேஸ் தங்களின் எல்லைக்குள் நுழையத் தடைவிதித்திருந்தது.

இதுகுறித்து அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர், "இஸ்ரேல் மீது ஈரான் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய தாக்குதலை கண்டிக்கத்தவறிவிட்டதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர் இஸ்ரேலுக்கு எதிரானவர்.தீவிரவாதிகள், கொலைகாரர்களுக்கு அவர் ஆதரவு தருகிறார். குத்ரேஸ் ஐக்கிய நாடுகள் சபையின் வரலாற்றில் ஒரு கறையாக நினைவுகூரப்படுவார்." என்று சாடியிருந்தார்.

# பழனி அருகே சொத்து தகராறு விவசாயி அடித்துக் கொலை ஐந்து பேரை போலீசார் கைது செய்து விசாரணை



பழனி : அக். 14,

பழனி அருகே பறைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் விவசாயி செந்தமிழன் (50). அதே பகுதியைச் சேர்ந்த இவரது உறவினர் துரைசாமி இருவருக்கும் இடையே பூர்வீக சொத்து, 15 ஏக்கர் நிலம் தொடர்பாக இடப்பிரச்சனை இருந்துள்ளது.

இதுகுறித்த வழக்கு பழனி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்தநிலையில் துரைசாமி, மனைவி வெள்ளைத்தாய் மற்றும் அவரது குடும்பத்தினர், பிரச்னைக்குரிய நிலத்தில் பயிரிட முயன்றனர். அப்போது துரைச்சாமி குடும்பத்தினருக்கும், செந்தமிழனுக்கு வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது துரைச்சாமி மற்றும் குடும்பத்தினர் செந்தமிழனை கட்டையால் தாக்கியுள்ளனர். இதில் படுகாயம் அடைந்த செந்தமிழன் பழனி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார். சம்பவம் அறிந்து வந்த கீரனூர் காவல் நிலைய போலீசார் கொலை வழக்கு பதிவு செய்து துரைசாமி, வெள்ளைத்தாய் உட்பட ஐந்து பேரை கைது செய்தனர். இப்பிரச்சனையில் விவசாயி அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் பாறைப்பட்டி கிராமத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சாதிவாரி கணக்கெடுப்புகளை உடனடியாக நடத்தி உரிய இட ஒதுக்கீடுகளை வழங்க வேண்டும் : வேல்முருகன்



திண்டுக்கல் : அக். 14,

சாதிவாரி கணக்கெடுப்புகளை உடனடியாக நடத்தி, வேலை வாய்ப்பு, கல்வி ஆகியவற்றில் உரிய இட ஒதுக்கீடுகளை வழங்க தமிழக முதல்வர் முன்வர வேண்டும், என தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் தெரிவித்தார்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் தென் மண்டல செயற்குழு கூட்டம் நேற்று திண்டுக்கல்லில் நடைபெற்றது. திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த தமிழக வாழ்வுரிமைக்கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்ட முடிவில், தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாநில தலைவர் வேல்முருகன், எம்.எல்.ஏ.-செய்தியாளர்களிடம் கூறியதாவது: சாதிவாரி கணக்கெடுப்புகளை உடனடியாக நடத்தி வேலை வாய்ப்பு கல்வி ஆகியவற்றில் உரிய இட ஒதுக்கீடுகளை வழங்க முதல்வர் முன்வர வேண்டும். சாம்சங் தொழிலாளர்கள் சங்கத்தை தமிழக தொழிலாளர் ஆணையம் பதிவு செய்ய வேண்டும். சாம்சங் நிர்வாக தொழிலாளர்களுடன் தமிழக வாழ்வுரிமைக் கட்சி உறுதுணையாக நின்று போராடும்.

நீதிமன்ற உத்தரவு என்ற பெயரில் நீர்நிலை ஆக்கிரமிப்பு எனக் கூறி பல ஆண்டுகளாக குடியிருக்கும் மக்களுக்கு மாற்று இடம் கொடுக்காமல் அவர்களின் வீடுகள் இடிக்கப்பட்டு வருவது கண்டிக்கத்தக்கது.

கொடைக்கானல் பகுதியில் 150 வீடுகள் இடிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு மாற்று வீடுகள், இடங்கள் தரப்படவில்லை. மணல் மாபியாக்களுக்கு துணை போகும் அரசு அதிகாரிகளை கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழ்நாட்டில் வளங்கள் கொள்ளையடிக்கப்படுவதால் வருங்கால சந்ததிகள் பாதிக்கப்படும்.

தமிழக காவல்துறை குற்றங்களை இரும்பு கரங்கள் கொண்டு அடக்கி வருகிறது. கைது செய்யப்படுபவர்கள் என்கவுண்டர் என்ற பெயரில் சுடுவது மனித உரிமை மீறல். தமிழகத்தில் எல்லா குற்றங்களுக்கும் காரணமாக இருப்பது மதுபானங்கள். தமிழகத்தில் ஆண்டுக்கு 1000 மதுபான கடைகளை திமுக அரசு மூட வேண்டும். மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பே சென்னையில் ஒருவர் பள்ளத்தில் விழுந்து உயிரிழந்துள்ளார். தமிழ்நாட்டில் மழை நீரை சேகரிக்க தடுப்பணைகள் இல்லை. தமிழகத்தில் பல்லாயிரம் டிஎம்சி தண்ணீர் கடலில் கலக்கிறது.

ஏற்கெனவே மின்சார கட்டணம் இரண்டு முறை உயர்த்தப்பட்ட நிலையில் தற்போது மீண்டும் உயர்வு என்பதை தமிழக மக்கள் தாங்கிக் கொள்ள முடியாது. அமலாக்கத் துறை மற்றும் வருமான வரித் துறையில் இதுவரை பதிவு செய்யப்பட்ட வழக்குகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். செந்தில் பாலாஜி ஆக இருந்தாலும் சரி, விஜயபாஸ்கர் ஆக இருந்தாலும் சரி குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

அதிமுக ஆட்சியின் முடிவில் 5 லட்சம் கோடியாக இருந்த அரசின் கடன், தற்போது 9 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. நிதிநிலைகளை சரி செய்து தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று வேல்முருகன் கூறினார்.

# புதுச்சேரியில் அட்டவணை இன மக்களுக்கு ஆண்ட, ஆளுகின்ற அரசுகள் துரோகம் : அதிமுக தாக்கு



புதுச்சேரி : அக். 14

புதுச்சேரியில் அட்டவணை இன மக்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்காமல் ஆண்ட, ஆளுகின்ற அரசுகள் மறுத்து வருகிறது என்று அதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து அக்கட்சியின் மாநில செயலாளர் அன்பழகன் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: "புதுச்சேரி மாநிலத்தில் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேல் குடியேறிய மற்றும் இருப்பிடம், வசிப்பிடம், பிறப்பு சான்றிதழ் இவற்றை பதிவு செய்யாத அட்டவணை இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு உரிய அங்கீகாரத்தை புதுச்சேரியில் ஆட்சி செய்த, செய்துகொண்டிருக்கின்ற அரசுகள் வழங்க மறுத்து வருகிறது.

இதனால் பாதிக்கப்பட்ட மக்களில் ஒருசிலர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து உச்ச நீதிமன்றம் வரை சென்று தங்களுக்கு உரிய தீர்ப்பினை பெற்று வந்துள்ளனர். இதில் தாயின் பிறப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும் என தீர்ப்பு பெற்றுள்ளனர். இதை எதிர்த்து அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்குதொடரப்பட்டது. இந்த வழக்கில் அரசின் மேல்முறையீட்டு மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது. பெற்றோர்களின் இருப்பிடத்தை கணக்கிடும்போது,தாயின் பிறப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்ற உச்சநீதிமன்றத்தின் உத்தரவை புதுச்சேரி அரசு அமல்படுத்த வேண்டும்.

இது சம்மந்தமாக அதிமுகசார்பில் பலகட்ட போராட்டங்களும், துணைநிலை ஆளுநர், முதல்வர், தலைமை செயலர், மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது. இந்த கருத்தை வலியுறுத்தி விடுதலை சிறுத்தைகள் கட்சிசார்பில் ரவிக்குமார் எம்பியும் மனு அளித்தார். 50 ஆண்டுகளுக்கு மேலாக புதுச்சேரி மாநிலத்தில் வசித்துக்கொண்டு அரசின் தவறான சட்டத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும் நீதி வழங்கப்படும் விதத்தில் அரசு மாநிலம் முழுவதும் பொருந்த கூடிய ஒரு அரசாணையை பிறப்பித்திருக்கவேண்டும்.

ஆனால் இந்த விவகாரத்தில் ஆளும் அரசானது உயர்நீதிமன்றம் மற்றும்அதன்உத்தரவுகளை அமுல்படுத்தவில்லை. உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பின் அடிப்படையில் அட்டவணை இனத்தவருக்கு உரிய சான்றிதழ்கள் வழங்கும் போது புதுச்சேரியில் பிறந்த பெண்களையும் பெற்றோர்களாக கருதி அவர்களின் பிள்ளைகளுக்கு 1964-ன் படி சாதி சான்றிதழ் வழங்க வேண்டும் என்கின்ற வழிகாட்டுதல் முழுமையாக புறக்கணிக்கப் பட்டுள்ளது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பினை புறக்கணித்து உதவி மாவட்ட ஆட்சியர் (வடக்கு) தனக்கு கீழ் பணியாற்றும் வட்டாட்சியர்களுக்கு குறிப்பாணை வழங்கியிருப்பது தவறான ஒன்றாகும். எனவே ஆளும் என். ஆர்.காங்கிரஸ்-பாஜக கூட்டணி அரசானது பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அட்டவணை இனத்து மக்களை கருத்தில் கொண்டு உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ள தீர்ப்பின் அடிப்படையில் புதுச்சேரியில் பிறந்த பெண்களையும், பெற்றோர்களாக கருத்தில் கொண்டு உரிய சான்றிதழ் வழங்க உரிய அரசாணையை உடனடியாக வழங்க வேண்டும் என்று அன்பழகன் கூறினார். பேட்டியின் போது மாநில அவைத்தலைவர் அன்பானந்தம், மாநில பொருளாளர் ரவிபாண்டுரங்கன், புதுச்சேரி நகரக் கழக செயலாளர் அன்பழகன் ஆகியோர் உடனிருந்தனர்.

# கவரைப்பேட்டை ரயில் விபத்து குறித்து திமுக, கூட்டணிக் கட்சிகள் பொய்ப் பிரச்சாரம் : எல்.முருகன் சாடல்



மதுரை : அக். 14

மெரினா சம்பவத்தை மறைக்க கவரைப்பேட்டை ரயில் விபத்து தொடர்பாக திமுகவும், அதன் கூட்டணி கட்சிகளும் பொய் பிரச்சாரம் செய்து வருகின்றன என மத்திய அமைச்சர் எல். முருகன் கூறியுள்ளார்.

மதுரையில் பல்வேறு இடங்களில் பாஜக உறுப்பினர் சேர்க்கை முகாம் நேற்று நடைபெற்றது. இதில் மத்திய இணை அமைச்சர் எல். முருகன் பங்கேற்றார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மக்கள் பேராதாரவுடன் பாஜக உறுப்பினர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. நாளை வரை உறுப்பினர் சேர்க்கை நடைபெறும். பாஜக உறுப்பினர்கள் எண்ணிக்கையை 11 கோடியாக உயர்த்த வேண்டும் என்ற இலக்குடன் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. பாஜகவில் நடைபெறுவது போல் வேறு எந்தக்கட்சியிலும் ஜனநாயக முறைப்படி உறுப்பினர் சேர்க்கை நடைபெறவில்லை.

தமிழகத்தில் ரயில் விபத்து குறித்து மத்திய அரசுக்கு எதிராக திட்டமிட்டு பொய்ப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. இந்த பொய்ப் பிரச்சாரத்தை திமுகவும், அதன் கூட்டணி கட்சிகளை சேர்ந்தவர்களும் திட்டமிட்டு செய்து வருகின்றனர். மெரினாவில் 5 பேர் உயிரிழந்தது தொடர்பாக கூட்டணி கட்சிகள் பேசினார்களா? மெரினாவில் என்ன நடந்தது. மெட்ரோ ரயில், பேருந்து வசதி செய்து கொடுக்கவில்லை. தண்ணீர் வசதி, ஆம்புலன்ஸ் வசதியில்லை. இதனால் 5 பேர் உயிரிழந்தனர். மெரினா சம்பவத்தை மறைக்க திமுக கூட்டணி ரயில் விபத்தில் நாடகமாடி வருகிறது.

இந்திய ரயில்வே துறை கடந்த 10 ஆண்டுகளில் பிரம்மாண்ட அளவில் வளர்ச்சி பெற்றுள்ளது. வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படுகிறது. ஒரு ஆண்டில் புல்லட் ரயில் இயக்கப்படும். திமுக, காங்கிரஸ் ஆட்சிகளில் ரயில் நிலையங்களுக்கு ஏன் வந்தோம்? என்ற நிலை இருக்கும். இப்போது நிலைமை அப்படியில்லை. ரயில் நிலையங்கள் சுத்தமாக, சுகாதாரமாக பராமரிக்கப்படுகிறது.

கவரைப்பேட்டை ரயில் விபத்து குறித்து என்ஐஏ விசாரித்து வருகிறது. மீட்பு பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. ஆனால் மொத்த ரயில்வேயும் வேலை செய்யவில்லை என்ற தோற்றத்தை உருவாக்குவதற்கான முயற்சியில் இந்தியாகூட்டணி கட்சிகள் இறங்கியுள்ளன. என்ஐஏ விசாரணையில் ரயில் விபத்துக்கான உண்மையான காரணம் வெளிவரும்.

திமுகவின் 3 ஆண்டு ஆட்சி முழுக்க முழுக்க வேதனையான ஆட்சி. பல்வேறு கட்டணங்களையும், வரிகளையும் உயர்த்திவிட்டனர். எந்தப்பக்கம் திரும்பினாலும் மனமகிழ் மன்றங்கள் உள்ளன. போதைப்பொருளை கட்டுப்படுத்த தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஜனநாயக நாட்டில் யார் வேண்டுமானாலும் கட்சி தொடங்கலாம். மாநாடு நடத்தலாம். நடிகர் விஜய்யின் செயல்பாடு, கொள்கைகளை பார்த்து தான் மக்கள் முடிவெடுப்பார்கள். அரசியலில் நிரந்தர எதிரி, நண்பன் இல்லை என திண்டுக்கல் சீனிவாசன் குறிப்பிட்டுள்ளார். கூட்டணி தொடர்பாக தேசிய தலைமை தான் முடிவெடுக்கும் என்று எல்.முருகன் கூறினார்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# அவங்க ஆதரவு இல்லாம சாத்தியமில்ல சதம் விளாசிய சஞ்சு சாம்சன் உருக்கம்

**புதுடெல்லி : அக். 14,**

**இந்தியா வங்கதேசம் அணிகள் இடையிலான மூன்றாவது டி20 போட்டியில் இந்திய அணி அபார வெற்றி பெற்று அசத்தியது. இந்தப் போட்டியில் இந்திய அணி டி20 கிரிக்கெட் வரலாற்றில் இரண்டாவது அதிகபட்ச ஸ்கோர் 297 அடிக்க துவக்க வீரர் சஞ்சு சாம்சனின் அதிரடி ஆட்டம் முக்கிய காரணமாக இருந்தது.**



கடந்த சில போட்டிகளில் தொடர்ந்து சொதப்பி வந்த சஞ்சு சாம்சன் இந்த போட்டியில் 47 பந்துகளில் 111 ரன்களை விளாசினார். இதில் 11 பவுண்டரிகள், 8 சிக்சர்கள் அடங்கும். இந்தப் போட்டி முடிந்த பிறகு பேசிய சஞ்சு சாம்சன், அணியின் தலைமை தனக்கு ஆதரவளித்ததாக மனம் திறந்து பேசியுள்ளார்.

"நான் நன்றாக ஆடியதால் அணியினர் மகிழ்ச்சி அடைந்தார்கள் என்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அங்கு என்ன செய்ய முடியும் என்பதை அறிந்து கொள்வது வெறுப்பாக இருக்கும், ஆனால் என்னால் இன்னும் சிறப்பாக செய்ய முடியும் என்பதை உணர்ந்தேன்." "அதிக போட்டிகளில் விளையாடும் போது, அழுத்தங்கள் மற்றும் தோல்விகளை எப்படி எதிர்கொள்வது என்று எனக்கு தெரியும். ஏனெனில் நான் பல முறை தோற்றிருக்கிறேன். சிறப்பாக செய்ய முடியும் என்பதை புரிந்து கொண்டு செய்ய வேண்டிய விஷயத்தில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும்."

"நாட்டிற்காக விளையாடும் போது, அழுத்தம் நிச்சயம் இருக்கும். ஆனால், சிறப்பாக ஆடி நிரூபிக்க வேண்டும் என்று நினைத்தேன். இதற்கான செயல்முறையை எளிமையாக வைத்துக் கொண்டு, ஒவ்வொரு பந்தையும் எதிர்கொண்டேன்." "என்ன ஆனாலும் எனக்கு ஆதரவளிப்பதாக தலைமை தெரிவித்தது. அது வெறும் வார்த்தையாக மட்டுமின்றி செயல்களிலும் வெளிப்பட்டது. கடந்த சீரிசில் இரண்டு முறை டக் அவுட் ஆகி, அடுத்து என்ன என்ற கேள்வியுடன் கேரளா சென்றேன், தற்போது நான் இங்கு இருக்கிறேன்" என்று தெரிவித்தார்.

# சமூக வலைதளங்களில் வைரலாகும் தோனியின் புதிய தோற்றம்

**புதுடெல்லி : அக். 14,**

**இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் எம்.எஸ்.தோனியின் புதிய தலைமுடி அலங்காரம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.**



சர்வேதச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றாலும், ஐபிஎல் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் (சிஎஸ்கே) அணிக்காக விளையாடி வருகிறார் தோனி. இந்நிலையில் 2025ம் ஆண்டு நடைபெறவுள்ள ஐபிஎல் போட்டியில் அன்கேப்டு பிளேயர் விதிமுறைப்படி சிஎஸ்கே அணிக்காக தோனி களமிறங்கவுள்ளார்.

இந்நிலையில் சமூக வலைதளங்களில் எம்.எஸ். தோனியின் புதிய புகைப்படம் ஒன்று வைரலாகி வருகிறது. கடந்த ஆண்டு நீண்ட தலைமுடியுடன் வலம் வந்த தோனி, தற்போது வெளியிட்ட புகைப்படத்தில் மிகவும் இளமைத் தோற்றத்துடனும் புதிய தலைமுடி அலங்காரத்துடனும் காணப்படுகிறார். சமூக வலைதளங்களில் வெளியான இந்த புகைப்படங்கள் வைரலாகியுள்ளன. தோனி ரசிகர்கள் இந்த புகைப்படங்களை லைக் செய்தும், ஷேர் செய்தும் வருகின்றனர்.

# 'கேப்டனும், பயிற்சியாளரும் கொடுத்த சுதந்திரம் உற்சாகத்தை அளித்தது' – ஹர்திக் பாண்ட்யா

**ஐதராபாத் : அக். 14,**

**கேப்டனும், பயிற்சியாளரும் கொடுத்த சுதந்திரம் மிகுந்த உற்சாகத்தை அளித்ததாக ஹர்திக் பாண்ட்யா தெரிவித்துள்ளார்.**



கடந்த டி20 உலகக்கோப்பை தொடரின் இறுதிப்போட்டியில் தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தி இந்திய அணி சாம்பியன்பட்டம் வென்றது. அந்த தொடரில் இந்தியாவின் கேப்டனாக செயல்பட்ட ரோகித் சர்மா சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இதையடுத்து அணியின் துணை கேப்டனாக செயல்பட்டு வந்த ஹர்திக் பாண்ட்யா அடுத்த கேப்டனாக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இந்தியாவின் புதிய தலைமை பயிற்சியாளராக கம்பீர் பதவியேற்ற பின்னர் டி20 அணியின் கேப்டனாக சூர்யகுமார் யாதவும், துணை கேப்டனாக சுப்மன் கில்லும் நியமிக்கப்பட்டனர். ஹர்திக் பாண்ட்யாவின் உடற்தகுதி காரணமாகவே அவர் கேப்டன் பதவியில் இருந்து நீக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகி இருந்தன. இதனால் சூர்யகுமார் யாதவ் மீது ஹர்திக் பாண்ட்யாவுக்கு அதிருப்தி ஏற்படலாம் என பலர் கூறி வந்தனர்.

ஆனால், இதுபோன்ற யூகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், கேப்டன் சூர்யகுமார் யாதவும், பயிற்சியாளர் கம்பீரும் அணியினருக்கு கொடுத்த சுதந்திரம் தங்களுக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்ததாக ஹர்திக் பாண்ட்யா பெருமிதம் தெரிவித்துள்ளார்.

ஐதராபாத்தில் நடைபெற்ற டி20 ஆட்டத்தில் வங்காளதேச அணியை 133 ரன்கள் வீழ்த்தி இந்திய அணி அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் வங்காளதேசத்திற்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டி20 கிரிக்கெட் தொடரை 3-0 என்ற கணக்கில் இந்திய அணி முழுமையாக கைப்பற்றியுள்ளது. நேற்றைய ஆட்டத்தில் சதம் விளாசி அசத்திய சஞ்சு சாம்சன், ஆட்டநாயகன் விருதை பெற்றார்.

தொடர் நாயகன் விருதை ஹர்திக் பாண்ட்யா பெற்றார். அப்போது பேசிய அவர், "கேப்டனும் பயிற்சியாளரும் கொடுத்த சுதந்திரம் எங்களுக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தது. அந்த உற்சாகம் அனைத்து வீரர்களிடமும் எதிரொலித்தது. இந்த விளையாட்டை உங்களால் ரசிக்க முடிந்தால், அதுவே உங்களிடமிருந்து அதிகபட்சத்தைப் பெறுவதற்கான சிறந்த வழியாகும். எல்லோருடைய வெற்றியையும் எல்லோரும் கொண்டாடும்போது, இன்னும் அதிகமாக செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றும்" என்று தெரிவித்தார்.

# ஹாங்காங் சிக்ஸஸ் கிரிக்கெட் – இந்திய அணிக்கு உத்தப்பா கேப்டன்

**புதுடெல்லி : அக். 14,**

**ஹாங்காங்கில் நடைபெறவுள்ள ஹாங்காங் சிக்ஸஸ் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணிக்கு ராபின் உத்தப்பா கேப்டனாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**



அடுத்த மாதம் நவம்பர் 1 முதல் 3-ம் தேதி வரை ஹாங்காங்கின் மிஷன் ரோட் மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் ஓர் அணியில் 6 வீரர்கள் களமிறங்கி விளையாடுவர். இந்திய அணியில் ராபின் உத்தப்பா, கேதார் ஜாதவ், ஸ்டூவர்ட் பின்னி, மேனாஜ் திவாரி, ஷாபாஸ் நதீம், பாரத் சாப்லி, ஸ்ரீவத்ஸ் கோஸ்வாமி ஆகியோர், இடம்பெற்றுள்ளனர்.

இந்தியா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, நியூஸிலாந்து உள்ளிட்ட 12 அணிகள் இந்த போட்டியில் பங்கேற்கின்றன. நவம்பர் 1ம் தேதி நடைபெறும் முதல் ஆட்டத்தில் இந்தியா, பாகிஸ்தானை சந்திக்கவுள்ளது.

# சுயநலமற்ற வீரர்கள்தான் என் அணிக்குத் தேவை – சூரியகுமார் யாதவ்

**ஹைதராபாத் : அக். 14,**

**மட்டையாளர்களின் சொர்க்கம், ஹை ஸ்கோர் ரப்பர் பந்து பிட்ச் ஆகிய ஹைதராபாத் மைதானத்தில் வங்கதேசத்தை பல பேட்டிங் சாதனைகளுக்கு இடையில் வென்று தொடரை 3-0 என்று கைப்பற்றியதையடுத்து இந்திய அணியின் கேப்டன் சூரியகுமார் யாதவ் தன் அணியில் சுயநலமற்ற வீரர்களுக்குத்தான் இடம் என்று கூறியுள்ளார்.**

சஞ்சு சாம்சன் ஒரு தரமான கிரிக்கெட் வீரர் என்பதோடு காட்டடி மன்னன் என்பதையும் நிரூபித்தது, 29 பந்துகளில் 62 என்று அதிரடி காட்டியவர் ஐந்தே பந்துகளில் 92 ரன்களுக்குச் சென்றது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. எப்படி எனில் 10வது ஓவரை வீசிய வங்கதேச ஸ்பின்னர் ரிஷாத் ஹுசைனை 5 சிக்சர்கள் விளாசி பின்னி எடுத்து 40 பந்துகளில் சதம் விளாசினார். இந்திய வீரர் ஒருவரின் 2வது அதிவேக டி20 சதமாகும் இது.

இந்நிலையில் போட்டி முடிந்த பிறகு கேப்டன் சூரியகுமார் யாதவ் கூறியதாவது: ஒரு அணியாக நிறைய சாதித்திருக்கிறோம். முக்கியமாக தொடரின் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட போது என் அணியில் தன்னலமற்ற வீரர்கள் வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன். ஹர்திக் பாண்டியா சொல்வது போல் தன்னலமற்ற, பரஸ்பரம் ஒருவர் ஆட்டத்தை மற்றவர்கள் மகிழ்வுடன் வரவேற்கும் மன நிலையே தேவை என்று கூறுவேன்.



களத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இதே பரஸ்பர உறவுகள், சகோதரத்துவம் தொடர்வதையும் விரும்புகிறேன். இப்படிப் பட்ட மன நிலை வந்து விட்டால் மைதானத்தில் கேளிக்கை தவிர வேறெதுவும் இருக்காது.

கவுதம் கம்பீர் சொல்வார், 'அணியை விட எந்த ஒரு தனி வீரரும் பெரிய ஆள் கிடையாது' என்று. ஒரு பேட்டர் 99 ரன்களில் இருந்தாலும் 49 ரன்களில் இருந்தாலும் அடிக்க வேண்டிய பந்தை அடித்து, மைதானத்திற்கு வெளியே அடிக்க வேண்டிய பந்தாக இருந்தால் மைதானத்துக்கு வெளியே அனுப்ப வேண்டியதுதான். சஞ்சு அதைத்தான் செய்தார், அவருக்காக மகிழ்ச்சியடைகிறேன்.

பேட்டிங், பவுலிங் இரண்டிலும் கொஞ்சம் நெகிழ்வுத்தன்மையுடன் இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தேவைப்பட்டால் பந்து வீச வேண்டும். வெற்றி என்னும் நல்ல பழக்கத்தை தொடர்ந்து எடுத்துச் செல்ல வேண்டும் என்று கூறினார் சூரிய குமார் யாதவ்.

இந்தியாவின் அடுத்த டி20 தொடர் நவம்பர் 8ம் தேதி முதல் 15ம் தேதி வரை தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக தென் ஆப்பிரிக்காவில் நடைபெறுகிறது. அதே வேளையில் பார்டர் கவாஸ்கர் டிராபிக்காக இந்திய டெஸ்ட் அணி தயாரிப்பில் இருக்கும்.

# அரச சிம்மாசனத்தில் அமரப்போகும் இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர்

**ஜாம்நகர் : அக். 14,**

**குஜராத் மாநிலம் ஜாம்நகர் சமஸ்தானத்தின் அரச குடும்ப வாரிசாக இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் அறிவிக்கப்பட்டுள்ளார்.**

குஜராத் மாநிலம் ஜாம்நகர் (நவாநகர்) சமஸ்தானத்தின் மன்னராக சத்ருசல்யாசிங் ஜடேஜா உள்ளார். இவர் தனது வாரிசாக தனது மருமகனும், முன்னாள் கிரிக்கெட் வீரருமான அஜய் ஜடேஜாவை (வயது 53) அறிவித்தார். அஜய் ஜடேஜாவின் தந்தை தவுலத்சிங்ஜி ஜடேஜாவும், மன்னர் சத்ருசல்யா சிங் ஜடேஜாவும் உறவினர்கள் ஆவர். அந்தவகையில் அஜய் ஜடேஜாவை தனது வாரிசாக மன்னர் சத்ருசல்யாசிங் ஜடேஜா நியமித்து உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், 'தசரா பண்டிகை, பாண்டவர்கள் வனவாசத்தில் இருந்து திரும்பிய நாளைக் குறிப்பதாக நம்பப்படுகிறது. அந்த தசராவாகிய தசராவாகிய நேற்று எனது வாரிசாக ஏற்றுக்கொண்ட அஜய் ஜடேஜாவுக்கு நன்றி. இதன் மூலம் எனது இக்கட்டான பிரச்சனைகளில் ஒன்றுக்கு தீர்வு கிடைத்துள்ளதால் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்' என குறிப்பிட்டு இருந்தார். ஜாம்நகர் மக்களுக்கு சேவை செய்யும் பொறுப்பை அஜய் ஜடேஜா ஏற்றுக்கொண்டது உண்மையிலேயே





அதன் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றும் அவர் கூறியிருந்தார்.

அஜய் ஜடேஜா இந்திய கிரிக்கெட் அணிக்காக கடந்த 1992 முதல் 2000 ஆண்டு வரை விளையாடி உள்ளார். மொத்தம் 15 டெஸ்ட் மற்றும் 196 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அஜய் ஜடேஜா விளையாடி உள்ளார். தனது அசாதாரண பீல்டிங் திறமையின் மூலம் அனைவராலும் நன்கு அறியப்பட்ட அஜய் ஜடேஜா, பல்வேறு தொடர்களில் இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றி உள்ளார்.

தொடர்ந்து சில பாலிவுட் படங்களில் நடத்து உள்ள அஜய் ஜடேஜா, சில தொலைக்காட்சி சேனல்களில் வெளியான தொடர்களிலும் பங்கேற்றுள்ளார். 2023-ம் ஆண்டு நடைபெற்ற 20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் தொடரில் ஆப்கானிஸ்தான் அணியின் ஆலோசகராக அஜய் ஜடேஜா நியமிக்கப்பட்டிருந்தார். கிரிக்கெட் தவிர்த்து அஜய் ஜடேஜாவின் குடும்பம் அரசியலிலும் கொடி கட்டி பறந்தது. அவரது தந்தை தவுலத்சிங்ஜி ஜடேஜா மூன்று முறை ஜாம்நகர் மக்களவை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டிருந்தார்.

# அர்த்தமற்ற தொடர்களுக்கு முற்றுப்புள்ளி வைக்குமா ஐசிசி – பிசிசிஐ

**புதுடெல்லி : அக். 14,**

**வங்கதேசத்திற்கு எதிராக நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரை 3-0 என்று இந்தியா வெற்றி பெற்றது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியோடு, இனி இந்திய அணியை யாராலும் அசைக்க முடியாது என்ற நம்பிக்கைகளையும் கொடுத்திருக்கக் கூடும். ஆனால் உண்மையில் இது போன்ற அர்த்தமற்ற தொடர்களை பிசிசிஐ நடத்தாமல் இருந்தால்தான் கிரிக்கெட்டுக்கு நல்லது.**

இந்திய அணியைப் பொறுத்தவரை சஞ்சு சாம்சன், ரியான்பராக், நிதிஷ் ரெட்டி,, ஹர்திக் பாண்டியாவின் அல்ட்ரா மாடர்ன் அக்ரஷன் போன்றவை சிறந்த விளைவுகளாக இருந்தாலும் இந்தத் தொடரினால் ஆய பயன் என்ன என்பதைப் பார்த்தோமானால் ஒன்றுமில்லை என்றுதான் கூற வேண்டும்.

வங்கதேச அணி கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் சொல்வது போல் 'ஒரு பொட்டலம்' அணி. ஒரு போட்டியிலாவது அவர்கள் ஒரு துணிவோடு ஆடியதாகத் தெரியவில்லை. பந்து வீச்சு வெறும் அரைக்குழி பந்துகள் இல்லையெனில் முழுக்குழிப் பந்துகள் என்று வீசி வீசி இந்திய பேட்டர்களிடம் சாத்து வாங்கினார்கள். அபிஷேக் சர்மா இந்த வாய்ப்பைத் தவற விட்டது அவருடைய கரியருக்கு நல்லதல்ல.

2009-ம் ஆண்டிலேயே ஐபிஎல் வந்த புதிதில் தென் ஆப்பிரிக்கா கேப்டன் கிரேம் ஸ்மித் கிரிக் இன்போ தளத்துக்கு அளித்த பேட்டியில், 'வீரர்களைக் காப்பாற்ற வேண்டுமெனில் அர்த்தமற்ற தொடர்களை நிறுத்த வேண்டும்' என்றார்.

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் என்ற ஒன்று இல்லாவிட்டால் இப்போதிருக்கும் பிசிசிஐ நிச்சயமாக வங்கதேசத்துடன் ஆட சம்மதிக்கவே சம்மதித்திருக்காது. அந்த வகையில் டெஸ்ட் கிரிக்கெட்



நடந்தது பரவாயில்லை. ஆனால் எதற்கு இந்த டி20 தொடர்? சொத்தை டீமை அழைத்து ஆயிரக்கணக்கில் ரன்களைக் குவித்து சாதனை புரிந்ததாக ரசிகர்களை நம்ப வைப்பதற்கும் மார்தட்டுவதற்குமான தொடர்கள் ஏன் என்பதே நம் கேள்வி. ஏன் இந்தத் தொடரை ஆப்கானிஸ்தானுக்கு எதிராக ஆடியிருக்கக் கூடாது?

இது போன்ற தொடர்களினால் நிதிப்பயன்கள், லாபவேட்டை நடத்த முடியலாமே தவிர, அர்த்தமுள்ள கிரிக்கெட் தொடரா இது என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டியிருக்கிறது. வீரர்களின் உடல்களை களைப்படையச்செய்வதுதான் இதன் மூலம் நடைபெறும் இந்திய அணிக்கு மட்டுமன்று, வங்கதேச அணிக்கும் மன/ உடல் ரீதியான சோர்வே இத்தகைய தொடர்கள்.

அலி பாக்கர் என்ற தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஐசிசி முன்னாள் அதிகாரி ஒருமுறை குறிப்பிட்டார், 'ஐசிசி-யின் எதிர்காலப் பயணத்திட்டம் அதாவது எஃப்.டி.பி என்பது முழுமுதல் நான்சென்ஸ்' என்று. மேலும் அவர் கூறும்போது இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா கிரிக்கெட் வாரியங்கள் சொற்படிதான் தொடர்கள் நிர்ணயிக்கப்படுகின்றன.

இது இந்த மூன்று வாரியங்களுக்கும் அணிகளுக்கும்தான் சாதகம். தென் ஆப்பிரிக்கா, வெஸ்ட் இண்டீஸ், நியூஸிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கு இதனால் பின்னடைவே என்றார் அலி பாக்கர். இவர் இதை ஏதோ 10 ஆண்டுகளுக்கு முன்பு கூறவில்லை, 2023ம் ஆண்டு கூறியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் என்பது 3 அணிகளுக்கு மட்டுமானதல்ல என்று அவர் கடுமையாகச் சாடினார். குறிப்பாக 2023-27 எஃப்.டி.பி. சுழற்சியில் தென் ஆப்பிரிக்கா 28 டெஸ்ட் போட்டிகளை மட்டுமே ஆட, இங்கிலாந்து 43, ஆஸ்திரேலியா 40, இந்தியா 38 டெஸ்ட் போட்டிகளில் ஆடுகின்றது. இப்படி கிரிக்கெட்டை வெறும் மும்முனைப் போட்டியாக மாற்றுவதால் சாதனைகள் உட்பட கிரிக்கெட்டின் அனைத்து சாதகங்களும் இந்த மூன்று நாடுகள் வசமே இருக்கும் என்கிறார் அலி பாக்கர். ஆன்ரிச் நோர்க்கியா 50 டெஸ்ட் போட்டிகளை விளையாட முடியுமா? ரபாடா 400 டெஸ்ட் விக்கெட்டுகள் சாதனை நிகழ்த்த முடியுமா? என்கிறார். ஆகவே சாதனைகள் என்பது ஏதோ தனி மனித திறமை சார்ந்தது என்பது மட்டுமல்ல, வாய்ப்புக்கான மேடை அமைத்துக் கொடுப்பதன் அமைப்புசார் ஏற்பாடுகளின் விளைவுகள் என்பதையும் கவனிக்க வேண்டும்.

வரலாறு சினிமா

# பிளாக் : திரை விமர்சனம்

**சென்னை : அக். 14,**

**சென்னை உப்பளப்பாக்கம் பகுதியில் வசித்து வரும் ஜீவா, பிரியா பவானி சங்கர் தம்பதிகள், வார விடுமுறையைக் கொண்டாட, இன்னும் யாரும் குடியேறாத வீடுகள் நிறைந்த பகுதியிலுள்ள வீட்டில் தங்குகின்றனர்.**

அப்போது மின்சாரம் கட் ஆனதால், அங்கு இருக்கும் ஜெனரேட்டரை இயக்குகின்றனர். திடீரென்று எதிரிலுள்ள வீட்டில் விளக்குகள் எரிய, அவர்களைப் போலவே தோற்றம் கொண்ட ஜீவாவும், பிரியா பவானி சங்கரும் இருக்கின்றனர். அங்கு ஏதோ மர்மம் இருப்பதை அறிந்து பதற்றம் அடைந்த ஜீவா, பிரியா பவானி சங்கர் தம்பதிகள், காரில் அந்த இடத்தில் இருந்து தப்பித்துச் செல்கின்றனர்.

ஆனால், மீண்டும் மீண்டும் ஒரே இடத்துக்கே வந்து சிக்கிக்கொள்கின்றனர். பிறகு என்ன நடக்கிறது, தம்பதிகள் உயிர் பிழைத்தார்களா? பல்வேறு காலக்கோடுகளை இணைக்கும் இருட்டு என்ன சொல்கிறது என்பது மீதி கதை. இது, 2013ல் வெளியான 'கோஹரன்ஸ்' என்ற ஹாலிவுட் படத்தின் அதிகாரப்பூர்வ ரீமேக். கணவன், மனைவியாக வரும் ஜீவா, பிரியா பவானி சங்கர் இருவரும் பொருத்தமான ஜோடி. தங்களைச்சுற்றி நடக்கும் குழப்பமான சம்பவங்களை பதற்றத்துடன் எதிர்கொள்ளும் காட்சியில் சிறப்பாக நடித்துள்ளனர். விவேக் பிரசன்னாவின் வில்லத்தனம் எதிர்பாராதது. யோக் ஜேபி, ஸ்வயம் சித்தா, ஒரு காட்சியில் வரும் ஷாரா ஆகியோர் கவனத்தை ஈர்த்துள்ளனர்.

பயமுறுத்தும் இருள் நிறைந்த காட்சிகளைப் பல கோணங்களில் படமாக்கி, விறுவிறுப்பை அதிகரிக்கச்



செய்துள்ளது கோகுல் பினோய் ஒளிப்பதிவு. சாம் சி.எஸ் பின்னணி இசை படத்துக்கு மிகப்பெரிய பலம். சரியாக கவனம் செலுத்தாவிட்டால் குழப்பத்தை ஏற்படுத்திவிடும் கதைக்கும், காட்சிகளுக்கும் எடிட்டர் பிலோமின் ராஜ் நேர்த்தியாக உழைத்துள்ளார். மனிதர்கள் சந்திக்கும் மாற்றங்களுக்கு அறிவியலும் முக்கிய காரணம் என்பதை மாறுபட்ட மேக்கிங்கின் மூலம் இயக்குனர் கே.ஜி.பாலசுப்ரமணி சொல்லியிருக்கிறார். ஜீவாவுடன் ஜீவா மோதும் சண்டைக்காட்சியில், ஸ்டண்ட் மாஸ்டர் மெட்ரோ மகேஷின் கடும் உழைப்பு தெரிகிறது. வெவ்வேறு கட்டங்களில் நடக்கும் கதையை இன்னும் எளிமைப்படுத்தி இருக்கலாம். பாடல்கள் வேகத்தடை போல் இருக்கின்றன.

# சரத்குமார் – சண்முக பாண்டியனின் 'கொம்புசீவி' முதல் தோற்றம்

**சென்னை : அக். 14,**

**இயக்குநர் பொன்ராம் இயக்கத்தில் விஜயகாந்த் மகன் சண்முக பாண்டியன் நடிக்கும் 'கொம்புசீவி' படத்தின் முதல் தோற்றத்தை படக்குழு வெளியிட்டுள்ளது.**

படத்தின் முதல் தோற்றத்தை தனது எக்ஸ் தள பக்கத்தில் பகிர்ந்துள்ள இயக்குநர் பொன்ராம், "1996 வாக்கில் உசிலம்பட்டி, ஆண்டிபட்டி, வைகை அணை பகுதியில் நடந்த கதைகள்" என குறிப்பிட்டுள்ளார். போஸ்டரை பொறுத்தவரை காவல் நிலையத்தில் காவல் துறையினரை சிறையில் அடைத்து விட்டு, அவர்களின் துப்பாக்கியை சண்முக பாண்டியன் ஏந்தி நிற்கிறார். இவர்களுக்கு நடுவே கையில்



லத்தியை வைத்துகொண்டு அமர்ந்திருக்கிறார் சரத்குமார். வயதான தோற்றத்தில் வெள்ளை தாடி, வெள்ளை முடியில் சரத்குமாரை அடையாளம் காண்பதே சிரமமாக உள்ளது. இந்த முதல் தோற்றம் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

'வருத்தப்படாத வாலிபர் சங்கம்', 'ரஜினிமுருகன்', 'சீமராஜா', 'எம்ஜிஆர் மகன்' உள்ளிட்ட படங்களை இயக்கியவர் பொன்ராம். இவரது இயக்கத்தில் அடுத்ததாக திரைக்கு வர உள்ள படம் 'கொம்புசீவி'. இந்தப் படத்தில் சரத்குமார், சண்முகபாண்டியன் முதன்மை கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். காளி வெங்கட் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். படத்தின் வெளியீட்டு தேதி குறித்த அறிவிப்பு வெளியாகவில்லை.

## வரலாறு உலகம்

# அமெரிக்கர்களை கொல்லும் புலம்பெயர்ந்தோருக்கு மரண தண்டனை – டிரம்ப் அதிரடி




**வாஷிங்டன் : அக். 14,**


**அமெரிக்காவில் அமெரிக்கர்களை கொல்லும் புலம்பெயர்ந்தோருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று டிரம்ப் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்க அதிபர் தேர்தல் நவம்பர் 5ம் தேதி நடைபெற உள்ளது. இதில் ஜனநாயக கட்சி வேட்பாளராக தற்போதைய துணை அதிபர் கமலா ஹாரிசும், குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்பும் களமிறங்கியுள்ளனர்.

தேர்தல் நெருங்கி வரும் நிலையில் இரு வேட்பாளர்களும் தீவிர பிரசாரம் மற்றும் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், கொலராடோ மாகாணம் அரோரா நகரில் நடந்த தேர்தல் பிரசார நிகழ்ச்சியில் குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்டு டிரம்ப் கலந்துகொண்டார்.

நிகழ்ச்சியில் டிரம்ப் பேசியதாவது, சட்டவிரோதமாக நுழைந்த புலம்பெயர்ந்தோரால் அமெரிக்கா தற்போது உலகம் முழுவதும் ஆக்கிரமிக்கப்பட்ட அமெரிக்கா என அழைக்கப்படுகிறது. சட்டவிரோதபுலம்பெயர்ந்தோர் மிகவும் ஆபத்தானவர்கள். அமெரிக்காவில் அமெரிக்கர்கள், பாதுகாப்புப்படையினர், போலீசாரை கொலை செய்யும் புலம்பெயர்ந்தோருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# ஈராக்கில் இருந்து இஸ்ரேல் மீது டிரோன் தாக்குதல்



**பாக்தாத் : அக். 14,**

**ஈராக்கில் இருந்து இஸ்ரேல் மீது டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டது.**

இந்த போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட 41 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அதேபோல், மேற்குகரையில் ஏற்பட்ட மோதலில் 700க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே, இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும், லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா பயங்கரவாதிகளும், ஈராக்கில் செயல்பட்டு வரும் பயங்கரவாத அமைப்பினரும் ஆதரவு அளித்து வருகின்றனர். இந்த அமைப்புகள் இஸ்ரேல் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், ஈராக்கில் செயல்பட்டு வரும் பயங்கரவாத அமைப்பு இஸ்ரேல் மீது நேற்று டிரோன் தாக்குதல் நடத்தியுள்ளது. இஸ்ரேலின் கோலன் ஹைட்ஸ் பகுதியை குறிவைத்து இந்த டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இஸ்ரேலிய ராணுவ தளத்தை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தியதாக ஈராக் பயங்கரவாத அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை.

# இந்தோனேசியாவில் படகு தீப்பிடித்து விபத்து : 5 பேர் பலி



**ஜகர்த்தா : அக். 14,**

**காற்றின் வேகம் காரணமாக படகு முழுவதும் மளமளவென தீ பரவி எரிய தொடங்கியது.**

இந்தோனேசியாவின் வடக்கு மலுகு தீவில் பெனி லவோஸ் மாகாணத்தில் கவர்னர் தேர்தல் நடைபெற உள்ளது. கவர்னர் வேட்பாளரான பென்னி என்பவர் தனது ஆதரவாளர்களுடன் அங்குள்ள பகுதிகளுக்கு படகில் சென்று பிரசாரம் மேற்கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராதவிதமாக அந்த படகில் தீப்பிடித்தது. காற்றின் வேகம் காரணமாக படகு முழுவதும் மளமளவென தீ பரவி எரிய தொடங்கியது. சிறிது நேரத்தில் படகு தீக்கிரையாகி சாம்பலானது. இந்த விபத்தில் படகில் இருந்த 5 பேர் உடல் கருகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 9 பேர் படுகாயம் அடைந்தனர்.

# பிரேசிலை தாக்கிய புயல் – 7 பேர் பலி



**பிரேசிலா : அக். 14,**

**பிரேசிலில் புயல் தாக்கியதில் 7 பேர் உயிரிழந்தனர்.**

தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு பிரேசில். அந்நாட்டின் சவ் பலோ மாகாணத்தை நேற்று முன்தினம் சனிக்கிழமை சக்திவாய்ந்த புயல் தாக்கியது. கனமழையுடன் மணிக்கு 108 கிலோமீட்டர் வேகத்தில் புயல் காற்று வீசியது. இதன் காரணமாக நகரின் பல்வேறு பகுதிகளில் மின்கம்பங்கள், மரங்கள் சாய்ந்தன. புயலால் சவ் பலோ மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் மின் விநியோகம் தடைபட்டது. இதனால், 10 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் மின்சாரமின்றி இருளில் மூழ்கின. இந்நிலையில், பிரேசிலை தாக்கிய புயலில் சிக்கி 7 பேர் உயிரிழந்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. மேலும், பலர் படுகாயமடைந்துள்ளனர். புயலின் தாக்கம் தீவிரமாக உள்ள நிலையில் மீட்புப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

# பாகிஸ்தானில் பழங்குடியினர் இடையே மோதல் : 11 பேர் பலி



**கைபர் பக்துன்குவா : அக். 14,**

**பாகிஸ்தானில் இரண்டு பழங்குடியினர்குழுக்களிடையே திடீரென ஏற்பட்ட மோதலில் பெண்கள், குழந்தைகள் உள்பட 11 பேர் பலியாகி உள்ளனர். இதுதவிர, 6 பேர் காயமடைந்தனர்.**

பாகிஸ்தான்நாட்டின்கைபர் பக்துன்குவா மாகாணத்தில் அப்பர் குர்ரம் மாவட்டத்தில் இரண்டு பழங்குடியின குழுக்களிடையே திடீரென மோதல் ஏற்பட்டு உள்ளது. இந்த சம்பவத்தில் பெண்கள், குழந்தைகள் உள்பட 11 பேர் பலியாகி உள்ளனர். இதுதவிர, 6 பேர் காயமடைந்தனர்.

கடந்த மாதம் கைபர் பக்துன்குவா மாகாணத்தில், லோயர் குர்ரம் மாவட்டத்தில் நிலத்தகராறு ஒன்றில் இரு தரப்பினர் இடையேயேற்பட்ட மோதல் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து, நடந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில், 7 பேர் பலியானார்கள். இதனையடுத்து, இரு குழுவினரையும் சமரசப்படுத்தும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர் என அதுபற்றிய தகவல் தெரிவிக்கின்றது.

இதேபோன்று மற்றொரு சம்பவத்தில், குர்ரம் பகுதியில் பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில், 7 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். 5 பயங்கரவாதிகள் காயமடைந்தனர். இவர்கள் கடந்த காலங்களில், பாதுகாப்பு படையினர் மற்றும் பொதுமக்கள் மீது பலமுறை தாக்குதல்நடத்தியுள்ளனர் என கூறப்படுகிறது. அவர்களிடம் இருந்து வெடிகுண்டுகள், துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. அவர்களின் பதுங்குகுழிகளும் அழிக்கப்பட்டன.

# கமலா ஹாரிஸ் பிரசாரத்துக்கு ஏ.ஆர்.ரகுமான் இசையில் பாட்டு இசை நிகழ்ச்சி நடத்த ஏற்பாடு



**வாஷிங்டன் : அக். 14,**

**அமெரிக்க அதிபர் தேர்தல் வருகிற நவம்பர் மாதம் நடைபெற உள்ளது. இதில் ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய துணை அதிபரும், இந்திய வம்சாவளியை சேர்ந்தவருமான கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார். அவர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.**

இந்த நிலையில் அமெரிக்க அதிபர் தேர்தல் வேட்பாளராக கமலா ஹாரிஸ் தேர்வு செய்யப்பட்டதைக் கொண்டாடும் விழாவில், இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் நேரடி இசை நிகழ்ச்சி நடத்துகிறார் என்று ஆசிய, அமெரிக்க, பசிபிக் தீவுவாசிகளின் வெற்றி நிதியம் அமைப்பு அறிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பு கூறும்போது, அமெரிக்க அதிபர் தேர்தல் வேட்பாளராக கமலா ஹாரிஸ் அறிவிக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க தருணத்தை ஏ.ஆர்.ரகுமானுடன், உலகத் தரம் வாய்ந்த நேரடி இசை நிகழ்ச்சியுடன் இணைந்து கொண்டாட உள்ளோம் என்று தெரிவித்துள்ளது.

நிகழ்ச்சிக்கான தேதி குறித்த அறிவிப்பு வெளியிடப்படவில்லை. அதே போல் ஏ.ஆர். ரகுமான் தரப்பிலும் எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. இதற்கிடையே கமலா ஹாரிஸுக்கு ஆதரவாக 30 நிமிட நிகழ்ச்சி வீடியோவை ஏ.ஆர். ரகுமான் பதிவுசெய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## அணுசக்தி தளங்களின் ரகசிய தகவல்கள் திருட்டு

# இஸ்ரேலின் பலமுனை சைபர் தாக்குதலில் ஸ்தம்பித்தது ஈரான்



**தெஹ்ரான் : அக். 14,**

**இஸ்ரேல் உளவுத் துறையின்சைபர்தாக்குதலால் ஈரான் அரசின் செயல்பாடுகள் முடங்கிப்போயின. குறிப்பாக ஈரானின் அணுசக்தி தளங்கள் மீதும் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டு ரகசியங்கள் திருடப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.**

பாலஸ்தீனத்தின் காசா பகுதியை சேர்ந்த ஹமாஸ் தீவிரவாத அமைப்பின் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியா கடந்த ஜூலை 31-ம் தேதி ஈரான் தலைநகர் தெஹ்ரானில் படுகொலை செய்யப்பட்டார். இதன்பின்னணியில்இஸ்ரேல் உளவுத் துறை இருப்பதாக ஈரான் பகிரங்கமாக குற்றம் சாட்டியது. அப்போது இரு நாடுகளிடையே போர் பதற்றம் ஏற்பட்டு தணிந்தது.

இதைத் தொடர்ந்து கடந்த 27-ம் தேதி லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இஸ்ரேல் விமானப்படை நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா உயிரிழந்தார். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் கடந்த 1-ம் தேதி இஸ்ரேல் பகுதிகளை குறிவைத்து ஈரான் ராணுவம் 180 ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலுக்காக ஈரானுக்கு தகுந்தபதிலடிகொடுக்கப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார். ஆனால் இதுவரை ஈரான் மீது நேரடி தாக்குதல் நடத்தப்படவில்லை.

எனினும் ஈரானின் பொருளாதாரத்தை முடக்கும் வகையில் அமெரிக்க அரசு, அந்த நாட்டின் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை புதிய பொருளாதார தடைகளை விதித்தது. இதன்படி ஈரானில் கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலிய பொருட்கள் ஏற்றுமதியில்ஈடுபட்டிருக்கும் 10 நிறுவனங்களுக்கு அமெரிக்க அரசு தடை விதித்துள்ளது.

இந்த சூழலில் ஈரான் அரசு நிர்வாகம், நாடாளுமன்றம், சட்டப்பேரவை நிர்வாகம் மற்றும் நீதித் துறை நிர்வாகத்தை குறிவைத்து இஸ்ரேல் உளவுத் துறை தொடர் சைபர் தாக்குதல்களை நடத்தி உள்ளது. இதன் காரணமாக ஈரான் அரசின் செயல்பாடுகள் முற்றிலுமாக முடங்கியிருக்கிறது. குறிப்பாக ஈரானின் அணுசக்தி தளங்கள், எரிசக்தி, மின் விநியோக கட்டமைப்பின் செயல்பாடுகள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. ஈரான் முழுவதும் உள்ள வங்கிகள் முடங்கி உள்ளன. ஏடிஎம் மையங்களில் இருந்து பணம்கூட எடுக்க முடியவில்லை.

இதுகுறித்து ஈரான் சைபர் கவுன்சில் முன்னாள் செயலாளர் பெரோஸ்பாடி, ஈரான் இன்டர்நேஷனல் என்ற ஊடகத்துக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது: ஈரானின் அனைத்து அரசு துறைகள் மீதும் சைபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டு உள்ளன. மிக முக்கிய ஆவணங்கள் திருடப்பட்டு உள்ளன. ஈரானின் அணுசக்தி தளங்கள், எண்ணெய் குழாய் கட்டமைப்பு, போக்குவரத்து, துறைமுகங்கள் ஆகியவற்றின் மீதும் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுஇருக்கிறது. ஈரான் அணுசக்தி தளங்களின் ரகசிய ஆவணங்கள் திருடப்பட்டு உள்ளன. ஈரான் முழுவதும் குழப்பமான சூழல் நிலவுகிறது என்று பெரோஸ்பாடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சர்வதேச சைபர் நிபுணர்கள் கூறியதாவது: கடந்த செப்டம்பர் 17-ம் தேதி லெபனான் நாட்டில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் பயன்படுத்திய 5,000 பேஜர்கள் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறின. இதில் ஏராளமான தீவிரவாதிகள் உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். இதன்பிறகே இஸ்ரேல் ராணுவம், ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் இடையிலான மோதல் தீவிரமடைந்தது. தற்போது லெபனான் மீது இஸ்ரேல் நேரடியாக போர் தொடுத்திருக்கிறது.

இதற்கு முன்பு கடந்த 2009-ம் ஆண்டில் இஸ்ரேலின் மொசாட் உளவுத் துறை நடத்திய சைபர் தாக்குதல் மூலம் ஈரானின் அணு ஆயுத திட்டம் முடங்கியது. அப்போது ஈரானின் நடான்சு நகரில் உள்ள அணுசக்தி தளத்தின் கணினிகளில் ஸ்டக்ஸ்நெட் என்ற வைரஸை பரப்பி அந்த அணுசக்தி தளத்தை இஸ்ரேல் உளவுத் துறை முற்றிலுமாக முடக்கியது.

தற்போது அதே பாணியில் ஈரானின் அணுசக்தி தளங்கள் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த தாக்குதல் குறித்து இஸ்ரேல் தரப்பிலோ, ஈரான் தரப்பிலோ இதுவரை எந்த தகவலும் வெளியிடப்படவில்லை. எனினும் இஸ்ரேல் உளவுத் துறையின் சைபர் தாக்குதலால் ஈரான் அரசின் நிர்வாகம் நிலைகுலைந்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இவ்வாறு சர்வதேச சைபர் நிபுணர்கள் தெரிவித்து உள்ளனர்.

மத்திய கிழக்கில் போர் மேகம் சூழ்ந்துள்ள நிலையில் ரஷ்யாவும் சீனாவும் ஈரானுக்கு தொடர்ந்து உதவி செய்து வருகின்றன. குறிப்பாக சீனா, ஈரானுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகிறது.

இஸ்ரேல் உளவுத் துறையால் ஈரான் மதத் தலைவர் அயத்துல்லா அலி காமெனியின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே ட்ரோன் தாக்குதல்களில் இருந்து அவரை காப்பாற்ற சீன அரசு சார்பில் அதிநவீன லேசர் தடுப்பு சாதனம் ஈரானுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அண்மையில் காமெனி, ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள பெரிய மசூதியில் பொதுமக்கள் மத்தியில் உரையாற்றினார். அப்போது ராணுவ வாகனங்களில் பொருத்தப்பட்ட சீன லேசர் தடுப்பு சாதனங்கள் மூலம் அவருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது. இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி உள்ளன.

ஈரானின் அணுசக்தி தளங்களை சைபர் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்க, சீன அரசு சார்பில் ஆன்டிவைரஸ் மென்பொருட்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால் அவற்றை மீறி இஸ்ரேல் உளவுத்துறை ஈரான் அணுசக்தி தளங்கள் மீது தாக்குதல் நடத்தியிருக்கிறது. முன்னதாக, துருக்மெனிஸ்தான் தலைநகர் அசுகாபாத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் ரஷ்ய அதிபர் புதினும், ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியனும் பங்கேற்றனர். அப்போது மத்திய கிழக்கு நிலவரம் குறித்து இரு தலைவர்களும் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினர்.

# இஸ்ரேலுக்கு உதவினால் கடும் நடவடிக்கை : மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஈரான் எச்சரிக்கை



**தெஹ்ரான் : அக். 14,**

**இஸ்ரேலுக்கு உதவி செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஈரான் எச்சரித்துள்ளது.**

கடந்த 1-ம் தேதி இஸ்ரேல் பகுதிகளை குறிவைத்து ஈரான் ராணுவம் 180 ஏவுகணைகளை வீசியது. இதில் பெரும்பாலான ஏவுகணைகளை இஸ்ரேல் ராணுவம் நடுவானில் அழித்தது. சில ஏவுகணைகள் தரையில் விழுந்து பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தின.

இந்த தாக்குதலுக்காக ஈரானுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார். இதன்படி ஈரானின் எண்ணெய் கிணறுகள், மின் விநியோக கட்டமைப்பு, அணு ஆயுத தளங்கள் மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தக்கூடும்என்றுதகவல்கள் வெளியாகி வருகின்றன.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் நட்பு நாடுகளின் வான் எல்லைகள் வழியாக ஈரானின் பல்வேறு பகுதிகள் மீதும்ஒரே நேரத்தில்தாக்குதல் நடத்த இஸ்ரேல் ராணுவம் வியூகம் வகுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. குறிப்பாக மத்திய கிழக்கில் உள்ள சவுதி அரேபியா, அஜர்பைஜான் ஆகியநாடுகளின்வான்பரப்பை பயன்படுத்தி ஈரான் மீது வான்வழி தாக்குதல் நடத்த இஸ்ரேல் திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆனால், ஈரானின் அணு ஆயுத தளங்கள், எண்ணெய் கிணறுகள் மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்த அமெரிக்க அதிபர் பைடன் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார். எனவே ஈரானின் இதர முக்கிய கட்டமைப்புகள் மீதுதாக்குதல்நடத்த இஸ்ரேல் ராணுவம் தயாராகி வருவதாக தெரிகிறது.

இந்த சூழலில் ஈரான் வெளியுறவுத் துறை, மத்திய கிழக்கில் உள்ள நாடுகளுக்கு தூதரகங்கள் வாயிலாக எச்சரிக்கை விடுத்துள்ளது. "இஸ்ரேலுக்கு உதவிசெய்யும் நாடுகள்மீதுமிகக்கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக ஏதாவது ஒரு நாடு தனது வான்பரப்பை இஸ்ரேல் ராணுவம் பயன்படுத்த அனுமதித்தால் அந்தநாடு மிக மோசமான விளைவுகளை சந்திக்கும்" என்று ஈரான் வெளியுறவுத் துறை எச்சரித்துள்ளது.

இஸ்ரேல்ராணுவத்துக்கும் லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுக்கும் இடையிலான போர் தீவிரமடைந்து வருகிறது. இரு நாடுகளின் எல்லைப்பகுதியில் ஐ.நா. அமைதிப்படை வீரர்கள் முகாமிட்டு உள்ளனர். இதில் இந்தியாவை சேர்ந்த 600 பேர் உட்பட பல்வேறு நாடுகளை சேர்ந்த 10,000 வீரர்கள் உள்ளனர்.

அமைதிப் படை முகாமிட்டுள்ள பகுதியில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக இஸ்ரேல் ராணுவம் குற்றம் சாட்டி வருகிறது. இந்த சூழலில் ஐ.நா. அமைதிப்படை முகாமிட்டுள்ள லெபனானின் நகோரா பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின. இதில் ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றும் இலங்கையை சேர்ந்த 2 வீரர்கள் படுகாயம் அடைந்தனர்.

இதற்கு பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. "ஐ.நா. அமைதிப்படை முகாம் மீது தாக்குதல் நடத்தக்கூடாது" என்று அமெரிக்கா, இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் இஸ்ரேல் அரசை கண்டித்து உள்ளன.

# ஒருபக்கம் தெற்கு லெபனானில் ஐ.நா. நிலைகள், மறுபக்கம் வடக்கு காசா முகாம்கள் மீது இஸ்ரேல் கடும் தாக்குதல்



**காசா : அக். 14,**

**தெற்கு லெபனானில் ஐக்கிய நாடுகளின் அமைதிக் குழு முகாம்கள் மீது தாக்குதல் நடத்திய இஸ்ரேலிய படைகள் தற்போது ஆம்புலன்ஸ்களைத் தாக்கப்போவதாக அச்சுறுத்தியுள்ளது. இதனிடையே, வடக்கு காசாவில் உள்ள ஜபாலியா அகதிகள் முகாமில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 22 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல் ஒரு பயங்கரமான நிலநடுக்கம் போல இருந்ததாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.**

லெபனானிய அதிகாரிகள் கூறுகையில், "மீட்புக்குழுவினர் இடிபாடுகளில் இருந்து மக்களை மீட்க முயற்சித்து வருகின்றனர். இடிபாடுகளுக்கு அடியில் உயிரிழந்தவர்களின் உடல்களும் உள்ளன. அவற்றின் எண்ணிக்கைக்காக நாங்கள் காத்திருக்கிறோம். குடியிருப்பு பகுதிகளில் இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதையே நாங்கள் பார்க்கிறோம். ஹிஸ்புல்லாக்களின் ஆயுதக் கிடங்குகள் மீது தாக்குதல் நடத்துவதாக இஸ்ரேல் கூறினாலும், நாங்கள் களத்தில் பார்ப்பது குடியிருப்பு பகுதிகள் மீதான தாக்குதலையே" என்று தெரிவித்தனர்.

இஸ்ரேலிய ராணுவம் வடக்கு காசாவில் தாக்குதலைத் தீவிரப்படுத்தி வரும் நிலையில் அங்குள்ள ஆயிரக்கணக்கான பாலஸ்தீனிய குடும்பங்களின் உணவுப்பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டம் கூறியுள்ளது. மேலும், வடக்குப் பகுதியின் முக்கிய வழிகளை இஸ்ரேல் மூடியுள்ளதால், அக்டோபர் 1-ம் தேதி முதல் வடக்கு காசாவுக்குள் எந்த உணவுஉதவியும் வரவில்லை என்றும் தெரிவித்தனர்.

தெற்கு லெபனானில் உள்ள மேலும் 22 கிராமங்கள் மற்றும் நகரங்களில் வசிப்பவர்களை உடனடியாக வெளியேறுமாறு, அங்கு பரந்த அளவில் ஹிஸ்புல்லாக்களின் ஆயுதங்கள் வசதிகள் இருப்பதால் தாக்குதலின்போது மக்கள் கொல்லப்படலாம் என்று இஸ்ரேல் அச்சுறுத்தியுள்ளது.

இஸ்ரேல் குறித்து துருக்கி அதிபர் எர்டோகன் கூறுகையில், "இஸ்ரேல் என்னும் இனப்படுகொலை பயங்கரவாத அமைப்பின் பின்னால் நிற்பவர்கள் இந்த அவமான அடையாளங்களை (காசா இனப்படுகொலை) தலைமுறைகளுக்கும் சுமந்து செல்வார்கள். இஸ்ரேல் பிராந்திய மற்றும் உலக அமைதிக்கு நேரடி அச்சுறுத்தலாக உள்ளது. உலக அமைதியை பேணிக்காக விரும்புகிறவர்கள் உடனடியாக இந்த தாக்குதலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். லெபனான் மற்றும் பாலஸ்தீனத்தின் ஸ்திரத்தன்மையை மட்டும் இஸ்ரேல் குறிவைக்கவில்லை. சுற்றியுள்ள பிராந்தியங்களிலும் அமைதியின்மையை பரப்புகிறது. டமாஸ்கஸ் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால், ரஷ்யா, ஈரான் மற்றும் சிரியா தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

தெற்கு லெபனானில் நிறுத்தப்பட்டிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் இடைக்கால படையின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு கத்தார் அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. இஸ்ரேலின் இந்த அத்துமீறல் சர்வதேச மனிதாபிமான சட்டத்தினை மீறுவதாகவும், ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானத்தை புறக்கணிப்பதாகவும் உள்ளது என்று சாடியுள்ளது.

லெபனானில் மோதல் பகுதியில் இருந்த 207 ஆரம்ப சுகாதார நிலையங்களில், சுமார் 100-க்கும் அதிகமானவை இஸ்ரேலிய தாக்குதலால் மூடப்பட்டு விட்டன என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் தாக்குதலில் உள்கட்டமைப்பு வசதிகள் சேதமடைந்ததால் ஐந்து மருத்துவமனைகள் மூடப்பட்டுவிட்டன. தாக்குதலால் காயமடைபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக்கொண்ட வருகிறது. குறைவான மனிதர்கள் மற்றும் வசதிகளால் சுகாதார கட்டமைப்பு இந்த இக்கட்டினைச் சமாளிக்க முடியாமல் திணறி வருகிறது என்றும் உலக சுகாதார நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

# லாவோஸ் அதிபருக்கு தமிழகத்தில் வடித்த பித்தளை புத்தர் சிலை பரிசளிப்பு : ஆசியான் உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி வழங்கினார்



**வியன்டியேன் : அக். 14,**

**லாவோஸ் நாட்டில் நடைபெற்ற ஆசியான் உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட பிரதமர் மோடி அங்கு சந்தித்த அயல்நாட்டுத் தலைவர்களுக்கு இந்திய பாரம்பரிய பெருமையைப் பறைசாற்றும் பொருட்களைப் பரிசளித்தார்.**

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பான 'ஆசியான்' அமைப்பில் இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தியா, வியட்நாம், லாவோஸ், கம்போடியா, புருனே ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. அதுபோல், கிழக்கு ஆசியா அமைப்பில் ஆஸ்திரேலியா, சீனா, இந்தியா, ஜப்பான் உட்பட 10 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்த 2 அமைப்புகளின் உச்சி மாநாடுகள் லாவோஸ் நாட்டின் தலைமையில் அந்நாட்டின் தலைநகர் வியன்டியேனில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற பிரதமர் மோடி லாவோஸ், தாய்லாந்து, நியூசிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கு இந்திய நாட்டின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் கைவினை பொருட்களை பரிசளித்தார்.

அந்த வகையில், பிரதமர் மோடி, நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சனுக்கு மகாராஷ்டிர மாநிலத்தின் பாரம்பரியமிக்க மாணிக்கக்கற்கள் பதித்த ஒரு ஜோடி வெள்ளி விளக்கை அன்பளிப்பாக அளித்தார். அடுத்து, லாவோஸ் அதிபர் சிசோலித்துக்கு தமிழகத்தில் இருந்து வடிவமைக்கப்பட்ட பித்தளையால் ஆன புத்தர்சிலையை வழங்கினார். லாவோஸ்பிரதமர் சோனெக்சே சிபாண்டோனுக்கு மரத்தில் செதுக்கிய புத்தர் முகம் மற்றும் அவரது மனைவிக்கு ராதா-கிருஷ்ணன்புடைச்சிற்பம் ஆகியவற்றை அளித்தார். தாய்லாந்து பிரதமர் பேடோங்டர்ன்ஷினவத்ராவுக்கு லடாக்பகுதியின்பண்பாட்டினை எடுத்துரைக்கும்மேசைஒன்றை பரிசளித்தார். ஜப்பான் பிரதமர் ஷிகேரு இஷிபாவுக்கு மேற்கு வங்கத்தின் கலைநயமிக்க வெள்ளி மயில் சிற்பத்தை பரிசாக வழங்கினார்.

# தமிழகத்தில் அக்டோபர்17 ஆம் தேதி வரை கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது





# பாபா சித்திக் கொலையின் பின்னணியில் கூலிப்படை தொடர்பு குறித்து விசாரிக்க 5 தனிப்படை

# அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் மாணவர் குறைதீர் குழுக்கள் : யுஜிசி அறிவுறுத்தல்




சென்னை / புதுக்கோட்டை | 14.10.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

14.10.2024 திங்கள்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஆற்காடு இராமசாமி முதலியார் , இந்திய வழக்கறிஞர், அரசியல்வாதி (பி.1887) (இ.1976)



ஏ. இலட்சுமணசுவாமி , இந்திய மருத்துவர், கல்வியாளர் (பி.1887) (இ.1974)



கவுதம் கம்பீர் , இந்தியத் துடுப்பாளர் (பி.1981)



## இன்றைய நினைவு நாள்

கே. பி. ஹரன் , தமிழக-இலங்கைப் பத்திரிகையாளர், பேச்சாளர் (பி.1906) (இ.1981)



சி. பி. முத்தம்மா , இந்தியப் பெண் சாதனையாளர் (பி.1924) (இ.2009)



மோகன் தாரியா , இந்திய அரசியல்வாதி, சமூகச் செயற்பாட்டாளர், வழக்கறிஞர் (பி.1925) (இ.2013)



## உலகத் தர நிர்ணய நாள்